LY 1927 Vol. IV No.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
No.
10 AUG

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2.   வெளிநாடு ரூ. 2-8-0.

ஸ்னானத்திலும் ஓர

Turkish Towels

படத்தில் காட்டியுள்ள "டர்க்கிஷ் துவாலை" பொதுவாக "தேங்காய் பூ துவாலை" என வழங்கப்படுகிறது. இதைப்போன்றதோர் துவாலை எப்பொழுதும் ஒவ்வொருவரிடத்திலுமிருக்க வேண்டியது அத்யாவசியம்.

என் ?

(1) ஸ்னானம் செய்யும்போது, உடம்பு தேய்க்கவும், அழுக்கை அறவே எடுத்துவிடவும் மிகவும் உபயோகப்படுகிறது.

(2) ஸ்னானத்திற்குப் பின் உடம்பை நன்றாகத் துவட்டி, தலையிலேனும், உடம்பிலேனும், துளி ஜலம் கூட தங்கி நிற்க, இடமில்லாமலிருப்பதற்கு உபயோகப்படுகிறது. ஆகையால் ஒன்றுக்கு இன்றே எழுதுங்கள்.

சயிஸ், 44" நீளம் × 22" அகலம் விலை ரூ. 1–4–0.
, 56 ,, × 28 ,, ரூ. 2–0–0.

K. S. Muthiah & Co.

Post Box 99 :: :: MADRAS

சந்தா ஆர்டர் பாரம்

Date,.................192 .

மேனஜர்,

லக்ஷ்மி ஆபீஸ், மதராஸ்.

...தயை செய்து என்னை / எங்களை நமது லக்ஷ்மிக்குச் சந்தா

...ராக / ...ளாக ச் சேர்த்துக்கொண்டு, இப்பொழுது நடந்து

... மலரின் முதல் இதழி லிருந்து ஸஞ்சிகைகளை அனுப்

...கொடுக்கவும். சந்தா ரூபாய் 2/-ம் மணியார்டர் செய்திருக் / 2/-க்கும் V. P. யில் தபால்

கிறேன்.

...சலவு உள்பட அனுப்பவும்.

அன்புள்ள,

(1).................................... (கையெழுத்து).

....

....

(2).................................... கூடுமானல் நேயர்களின்

.... கையெழுத்து.

....

....

(3)....................................

....

....

....

(4)....................................

....

....

....

குறிப்பு:—பெயர்களை மட்டும் இங்கிலீஷில் எழுதினால் மிகவும் நலமா யிருக்கும். தமிழில் எழுதினாலும் சரியே.

குறிப்பு

லக்ஷ்மிக்குச் சந்தா நேயராகச் சேர விரும்புப
பக்கம் தங்கள் பெயர்களை எழுதி, இதைக் கிழித்
கவரில் வைத்து, நமது ஆபீஸுக்கு அனுப்ப
இது அல்லாமல் நேயர்களின் சொந்த லெட்டர்
கார்டுகளிலும் எழுதி அனுப்பலாம். நேயர்கள் சந்
V. P. யில் அனுப்பச் சொல்லுவதை விட பணம் ம
டர் செய்தால், எங்களுக்குச் சுலபத்தையும், நேயர்க
தன லாபத்தையும் கொடுக்கும்.

சிங்கப்பூர், பினங்கு, ஆப்ரிக்கா போன்ற நாடு
லுள்ள நேயர்கள் ரூ. 2—8—0 முன்பணமாக மணியார்
அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
லக்ஷ்மி ஆபீஸ்,
சென்னை.

(இந்த இடத்தில் ஆபீஸுக்கு ஏதாவது தெரிவிக்க வேண்டிய திருந்தால் தெரிவிக்கலாம்.)

கையிலிருந்தாலும் அழகு!

பன்னிரு இதழ்களேயும் ஒன்ருய்ச் சேர்த்து பைண்ட் செய்யப் பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன் புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல் கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலேயை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி 99 : : : : சென்னே.

இனும்! இனும்!!

திருக்குறள் ஜெம் நோட்டு புக்

2 அணு தபால் ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 100-பக்கமுள்ள திருக்குறள் ஜெம் நோட்டு புக் ஒன்று அனுப்பப்படும்.

4 அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஷை புக் 1-ம் அழகான புது மாதிரி திறவுகோல் வளையம் 1-ம் (Key Ring English Make) ஆக இரண்டும் அனுப்பப் படும்.

சொற்பக் காப்பிகளே கைவச மிருப்பதால் உடனே முந்திக்கொள்வது நலம்.

K. S. முத்தையா அண்டு கம்பெனி,

ஸில்க் ஹவுஸ்,

ஹைரோடு, திருநெல்வேலி.

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 0 0
தென்னாபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ. 2 8 0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ. 40 0 0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ. 50 0 0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)		ரூ. 8 0 0
அரைப்பக்கம்	ஷை	ரூ. 4 0 0
கால்பக்கம்	ஷை	ரூ. 2 8 0

இனாம்! இனாம்!! இனாம்!!!

உதவியற்ற பொருளை வாங்குவதைவிட உள்ள தனத்தை இருப்பாக வைத்தல் நலம் (ஒருமுறை வாசித்து இரண்டுமுறை யோசிக்க வேண்டும்) குளிர்ச்சி பொருந்திய ஒரு மூக்கு கண்ணாடியும் ஒரு பவுன்டென் பேனாவும் இனாமாய்த் தரப்படும்.

22 கார்ட் ரோல்ட்கோல்ட் கோல்டன் டையல் ரிஸ்ட்வாட்சு.



எங்களுடைய ரிஸ்ட்வாட்சு கடியாரம் 10-வருடத்திற்கு காரன்டி என்று கேசின் உள்புறத்தில் ஸ்டாம்பு குத்தி உள்ளதும், ஆண், பெண் இருவர்களும் அணியக்கூடிய பூஷணங்களில் இது ஓர் கரபூஷணமாக ஜொலித்து சரியான காலத்தை காட்டக்கூடியதும் பார்வைக்கு வெகு அழகையும் மதிப்பையும் தரக்கூடியதுமான இயந்திரம் இதுவே. இது கைதேர்ந்த மெக்கானிக்கல் இன்சினீயர்களால் முயர்ச்சியோடு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 7.

விலாசம் :—ஓவர்ஸீஸ்சுவிஸ் வாட்சு கம்பனி.

மவுண்ட் ரோட்டு மதராஸ்.

நல்ல ஆரோக்கியத்தை வேண்டாதார் யார் ?

தாசன் முதல் ராஜன் வரை எல்லோரும் ஆரோக்யத்துடனிருக்கப் பிரியப்படுகிறார்கள். நமது தேசத்தில் ஜனங்களின் சுகத்தைக் கொள்ளை கொள்ளும், கணக்கிட முடியாத வியாதிகளால், ஆங்கில, ஆயுர்வேத சித்த, யுனானி, வைத்தியங்களுக்குப் பணத்தைக் கொட்டி கஷ்டப்படுகிறவர்கள் பலகோடி! கீழ்கண்ட நமது சுதேச ஔஷதங்களை ஒவ்வொரு குடும்பத்திலும் உபயோகித்து வந்தால் எவ்வித வியாதிகளும் தலைகாட்டும் என்ற சந்தேகமே யிராது. இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

நயம்	கஸ்தூரி	தோலா 1-க்கு	விலை	ரூ. 35—0—0
,,	கோரோசனை	,,	,,	ரூ. 15—0—0
,,	பச்சைக்கற்பூரம்	,,	,,	ரூ. 2—8—0
,,	குங்குமப்பூ	,,	,,	ரூ. 2—8—0
,,	பால்காயம்	தோலா 10-க்கு	,,	ரூ. 1—0—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, சென்னை.

ஹாமுனியோஸா சில்க் அங்கவஸ்திரம்

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாதம். வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 25,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி

தபால் பெட்டி 99, சென்னை.

சூரத் சில்க் புடவை.

கை நேசவில் நெய்தது. நல்ல பார்வையான புடவை. அழகாக $1\frac{1}{2}$ இஞ்சில் கரைக்கு ஜரிகை பேட். முகதலேக்கு ஜரிகை. புது மாதிரியான ரகம். நாகரீகமான ஆடை.

1.	16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உடல் சாதா ஜரிகைக் கரை ஜரிகை முக தலே புடவை 1-க்கு	ரூ. 12—0—0
2.	16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உட வில் பட்டுப்பூ	ரூ. 16—8—0
3.	16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் உட வில் ஜரிகை தந்திக் கம்பி	ரூ. 20—0—0
4.	16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் திக் கான ஜரிகைக் கொட்டடி	ரூ. 25—0—0
5.	12 மு × 44" உடல் சாதா ஜரிகை போட்ட ஜரிகை முகதலே	ரூ. 10—0—0

☞ பச்சை, மயில் கழுத்து, ரோஸ், ஆரஞ்சு, தங்கக் கலர், மேகவர்ணம் முதலிய கலர்களில் புடவை கிடைக்கும்.

K. S. Muthiah & Co.,

Export Dept.

Post Box 99 : : : : MADRAS.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி
பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா.
பத்திராசிரியர் : K. S. சுந்தரம்.

மலர் 4. | பிரபவ௵ ஆடிமீ 1927 ஜுலைமீ | இதழ் 12.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	575
2.	சரஸ்வதி துதி	576
3.	கிராமப்புனருத்தாரணம்	577
4.	நட்டாஜி	586
5.	பானம்	591
6.	இளையான்குடி மாறநாயனார் சரிதை ...	597
7.	ஆங்கிலம் படித்த மாணவர் நிலைமை ...	600
8.	ஜனேந்திரலோபி	604
9.	ஐம்புல வேடர் கும்மி	606
10.	கோடைகாலமும் கொத்துமல்லியும் ...	612
11.	ஒற்றுமையின் உயர்நிலை	617
12.	பழமொழித் திருத்தம்—களவுங் கற்றுமற ...	619
13.	விகடத் துணுக்குகள்	622
14.	சித்திரப்பத்தி	623
15.	உலகப்போக்கு	629
16.	லக்ஷ்மி பஞ்சாங்கம்—ஆகஸ்டுமீ	633

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210369

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியில் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையிலிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினல், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும்.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாக சேர்த்துவிட, கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

சென்னை.

லக்ஷ்மி துதி

வெற்றிகொள் படையினிலும்—பல
விநயங்கள் அறிந்தவர் கடையினிலும்
நற்றவ நடையினிலும்—நல்ல
நாவலர்த் தேமொழித் தொடையினிலும்
உற்ற செந்திருத்தாயை—நித்தம்
உவகையிற் போற்றியிங் குயர்ந்திடுவோம்
கற்றபல் கலைகளெல்லாம்—அவள்
கருணைநல்லொளி பெறக்களிதவிர்ப்போம்.

சரஸ்வதி துதி.

பள்ளிக்கூடங்களிற் பாடங்கள் தொடங்கு முன் ஸ்ரீ சரஸ்வதி தேவியின் துதியாகச் சிறு பிள்ளைகளும் பெண்களும் எளிதிற் பொருளறிந்து சொல்லத்தக்க தோத்திரப் பாடல் ஒன்று வேண்டும் என்று ஒரு அன்பர் கேட்டுக்கொண்டார். அப்படி உபயோகப் படத்தக்கதாக இயற்றப்பட்ட பாடலை "லக்ஷ்மி" யில் வெளியிட்டால் பலருக்கும் பயன்படும் என்று கருதி ஈண்டு வெளியிடலானேன்.

கல்விக் கரசி! குணவதியே!
கற்றோர் போற்றுங் குணநிதியே!
விளங்கும் வேத தந்தரியே!
வெண்டா மரைவாழ் சுந்தரியே!
வைரக் ரீடம் புனைந்தவளே!
வாணி யெனும்பேர் புனைந்தளே!
வீணை ஸ்படிகம் புத்தகமே!
விளங்குங் கரத்து வித்தகியே!
வெள்ளைக் கலையை யுடுப்பவளே!
வேண்டுங் கலைகள் கொடுப்பவளே!
வெள்ளைப் பணியே பூண்டவளே!
வேண்டுங் கம்பரை யாண்டவளே!
வேதா முதலோர் நாவிலுறை
வெள்ளைக் கிளியே! பூவிலுறை
எளியேம் பாலர் நின்மலர்த்தாள்
என்றும் போற்றித் துதிக்கின்றோம்;
கழக மிதன்கண் வருவாயே,
கல்வி நிரம்பத் தருவாயே,
சரஸ்வதி தேவீ! பூரணியே!
சரணஞ் சரணஞ் சரணனக்கே.

வ. சு. செங்கல்வாராய பிள்ளை, எம். ஏ.

கிராமப் புனருத்தாரணம்.

T. R. ஸ்ரீநிவாஸன், B. A.

கிராமங்களே உயிர்நிலை.

இந்தியா தேசத்தின் ஜீவாதாரம் கிராம வாழ்க்கையே யாகும். வாழ்க்கை நலனுக்கான இன்றியமையாத தொரு சாதனமாயிருத்தல் பற்றி அதன் பெருமை பெரிதும் போற்றத்தக்கதா யிருக்கிறது. ஜீவ நாடிகள் எனச் சொல்லத்தகும் கிராம வாழ்க்கையின் வளர்ச்சிப் பான்மையையே தேச முன்னேற்றம் மிகுதியும் சார்ந்ததா யிருக்கிறது. நாட்டின் பொருளாதார உயர்வுக்கும் கலாபிவிருத்திக்கும் நிலைக்களமாயிருப்பது மட்டுமே யன்றி கிராமங்கள் தேசத்திற்கென்றே பூர்வீகந் தொட்டு உரித்தான உயர் நாகரீகத்தை யாதொரு இடைஞ்சலும் நேராதபடி காப்பாற்றித்தரும் இடமாய் இலங்குகின்றன. எனவே, பிராணாதாரமான கிராம வாழ்க்கை நசிப்பது நாட்டின் நன்மைக்குக் கேடு சூழ்வதாகும்.

பண்டைய கிராம வாழ்க்கைப் பெருமை.

நம் நாட்டின் தொன்மைப் பெருமையெல்லாம் அக்காலத்து கிராம வாழ்க்கையின் வளத்தையே பொறுத்ததாகும். நாடு முழுதும் இயற்கை வாழ்வுக்கு உரித்தான கிராமங்களே பெரும்பான்மையாக இருந்தன. எங்கணும் யாதொருவிதமான கவலையுமின்றி ஜனங்கள் மிகவும் சந்தோஷமான! வாழ்வு நடாத்தி வந்தனர். "போதுமென்ற மனமே பொன்செயு மருந்து" என்ற வாக்கின் நுண்ணிய பொருளை அவர்கள் செவ்விதின் உணர்ந்திருந்தனர். ஆடம்

பரமற்ற இயற்கை வாழ்வும் உயர் நோக்கும் அவர்களிடைப் பொலிந்தன. வாழ்வு காலத்தும், தாழ்வு சமயத்தும் அவர்கள் அனைவரும் ஒன்றியிருந்தனர். ஆகவே, வறுமை, பிணி, தூக்கம் முதலியன அக்காலத்து அபூர்வமாகவே இருந்தன. நிறைவு, ஆயுராரோக்யம், குதூகுலம் இவைகளே அந்நாள் வாழ்க்கையின் அம்சங்களாய்ப் பொருந்தி விளங்கின. பொது நன்மையை உத்தேசித்து சுயநலத்தைத் தியாகம் செய்யும் கண்ணிய புத்தி அவர்களிடை விகசித்தது. தொன்றுதொட்டே பெருமை வாய்ந்த வட மொழிப் பயிற்சியும், கிராமங்களில் அவ்வப்பொழுது நடந்தேறும் திருவிழாக்களும், நவராத்திரி, தீபாவளி போன்ற பண்டிகைநாள் கொண்டாட்டங்களும் அவர்களிடையே சகோதர பாவத்தை வளர்த்து அன்னார் வாழ்க்கையை இன்பமே மயமாக்கின. அவர்கள் தம் வாழ்க்கையில் தோன்றும் எவ்விதமான சிரமங்களையும் சற்றும் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் அனைவரும் பிரிவினையாகாத குடும்பத்தினர் போலிருந்து வந்தனர். இத்தன்மையதான உன்னத வாழ்வு வாழ்ந்துவந்த தன் பயனாகவே அவர்கள் இகபர சாதகங்களைத் தேடிக் கொள்ளுவதில் மிகுதியும் வல்லுநராயிருந்தனர். மின்னின் நிலையினது மன்னுயிராக்கை என்பதை அவர்கள் தெள்ளி தின் அறிந்து என்றும் குன்றாத தெய்வபக்தி யுடையோராய்ப் பிரகாசித்தனர். வர்ணாசிரம தர்மங்கள் யாவும் குற்றங்கோடின்றி நடைபெற்று வந்தன. நற்குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாய் விளங்கிய அவர்களுக்கு மரணத்தைக் குறித்த அச்சம் சற்றும் கிடையாது. நிம்மதியான மனதுடனும், புன்னகை பொலிந்த முகத்தோடுமே அவர்கள் கடைசிக்காலம் விளங்கும். தர்மம் தழைத்து விளங்கினமை காரணமாக மாதம் மும்மாரி பெய்து நாடு மிகவும் சுபிட்சமாக இருந்தது.

கிராமப் புனருத்தாரணம்

இற்றை நிலைமை.

ஆனல் தற்காலம் முற்றிலும் நேர்மாருன நிலையில் நம் நாடு இருந்து வருகின்றது. பழையன பல கழிந்து புதியன புனைந்த இந்நாள் தேசத்தில் கிராம வாழ்க்கை ஏற்கனவே பெரும்பாலும் நசித்துவிட்டதென்று சொல்லி விடலாம். இன்னும் நாம் இது விஷயத்தைக் கவனியா திருப்போமாயின் சிறிது நாட்களில் எஞ்சியுள்ள ஒரு சிறிதும் மறைந்தொழிந்துவிடும் என்பதில் சந்தேகமே யில்லை. நிற்க, தற்பொழுதைய கிராம வாழ்க்கைக்கும் பூர்வீக கிராம வாழ்க்கைக்கும் உள்ள பேதம் அனந்தம். இற்றை நாள் நவீனமான பல மாறுதல்கள் அதனிடையே தோன்றி நிலைபெற்றுவிட்டன. பண்டு பச்சை பசேரென்ற புலங்களோடும் இயற்கை யணியாய்க் கண்ணுக்கினியதொரு விருந்தாய் விளங்கிய கிராமங்கள் இன்று பெரிதும் ஈன ஸ்திதியில் பொலிவிழந்திருக்கின்றன. முன்னர் அங்குக் காணப்பட்ட வாழ்க்கை யின்பமும் உயர்வும் இன்று காண லரிது. உலையா முயற்சியும் தளரா நம்பிக்கையும் அபூர்வ மாய்விட்டன. எங்கு நோக்கினும் வறுமையின் சிறுமை யும், இன்னலின் அரற்றலும், பேராசைப் பேயின் பிரசன்ன மும், வாழ்க்கை நலன் பொருளாதார வாழ்வு இவற்றின் சிதைவு இவைகளையே காண நேரிடுகிறது. மேலும் அறிவீனங் காரணமாய் அங்குப் போந்த புதிய தீமைகளும் பலவாகும். கண்மூடித் தனமான நம்பிக்கையை அடிப் படையாகக் கொண்ட சிற்சில பழக்க வழக்கங்களும் அங் குள்ளவர்கள்பால் உறுதியாய் நிலைபெற்றிருக்கக் காண லாகும். மலேரியா, இன்புளுயென்சா, காலரா போன்ற கேட்டே யறியாத பல கொடிய வியாதிகள் அங்கு பரவிய தன் காரணமாக நூற்றுக் கணக்கான துர் மரணங்கள் தற்பொழுது அங்கு சகஜமாய் நேரிடுகின்றன. தற்காலிக வழியில் ஆங்கிலப் படிப்பில் தேர்ந்த செல்வவந்தர் பலரும் கிராம வாழ்வை நீத்து நகரங்களில் வசிக்க ஆவல் மேற்

கொண்டுவிட்டனர். உயிருக்கும் உடைமைக்கும் பெரிதும் பாதகமான கொலையும் களவும் கிராம வாழ்க்கையில் அதிகரித்ததும் இதற்குக் காரணமெனலாம். ஆகவே, எஞ்சி நின்றிடலாகும் சிற்சில ஏழைக் குடும்பங்கள் வயிற்றுப் பாட்டுக்குப் பாடுபடுவதே தொழிலாய்ப் படிப்பின்மை காரணமான தம் அறிவீனத்தால் சுகாதார விஷயங்களை உணர்ந்துகொள்ள மாட்டாமல் மிகவும் சுகவீனமான வாழ்க்கை நடத்தி இடர்ப்பாடுறுகின்றன. கிராமங்களிலுள்ள நீர்நிலை வசதிகள் கோரை முதலிய களைகள் அடிக்கடி பிடுங்கி எறியப்படாமலும் தூரு எடுத்து சுத்தம் செய்யப்படாமலும் கவனக் குறைவு காரணமாய்ப் பெரிதும் கெட்டுப்போய் இன்று நோய்களை வளர்க்கும் நுட்பமான கிருமிக் கணங்களுக்கு இருப்பிடமாய் இருக்கின்றன. இன்மையின் கொடுமையோ சொல்லுந்தரமன்று. கிராம வாழ்க்கை நசித்து அதன் உன்னத லட்சயங்களெல்லாம் தேய்ந்து மாய்ந்து போனமைக்கு இதுவே காரணமாகும்.

ஒரு சில செல்வந்தர்களான குடித்தனக் காரர்களையும் இரண்டொரு முதலாளிகளையுந் தவிர மற்றையோர் யாவரும் அன்றாடம் உழைத்து வயிறு வளர்க்கவேண்டியவர்களாகவே இருக்கின்றனர். அவர்களுக்கு வாழ்க்கையில் வெறுப்பு மிகுந்துவிட்டபடியால் அதனை ஒரு பெரும்பாரமாகக் கருதுகின்றனர். அவர்கள் நிலைமை மிகவும் இரங்கற்பாற்றே. கிராமாந்தரங்களில் பண்டை நாள் தொட்டுப் பெருமை பெற்றிருந்த கைத்தொழில்கள் பலவும் இன்று எவரும் ஆதரிப்பாரின்றி அருமையாய் அழியுந் தன்மையில் வந்துவிட்டன. இதனாலேயே சீருஞ் செல்வமும் மல்கி விளங்கிய கிராமங்கள் இன்று சீர்கேடான நிலைமை எய்தின.

அன்றியும், அங்கு விளையலாகும் நெல், கோதுமை முதலிய தானியவகைகளும் காய்கறி, இறைச்சி, பால் தயிர் முதலியனவும் வேண்டுமளவு கூட வைத்துக்கொள்ளப் படாமல் பூராவும் நகரவாசிகளுக்குப் பயன்படுவதெற்கென அனுப்

பப்பட்டு விடுகிறபடியால் அங்குள்ள ஏழை மக்கள் படும் பாடு சொல்லுந்தரமன்று. இது கிடக்க, கிராம ஜனங்களிடையே இது காலை ஒற்றுமை வாழ்வு குன்றி சுயநலம் பேணலும், பொறாமை உணர்ச்சியும், விவாத புத்தியும் பெருகிவிட்டன. ஒருவரை யொருவர் ஏமாற்றி மோசம் செய்து அழித்துவிடும் நோக்கமே அதிகரித்திருக்கிறது. ஜாதி மதப் பூசல்கள் வேறே ஒரு புறம். மதத்தின் அடிப்படையான தத்துவங்களை எவரும் கவனிக்காது போகவே சமரசபாவம் பெரிதும் குறைந்துபோயிற்று. இவ்வளவும் போதாவென்று மேனாட்டு நாகரீகத் தீங்குகளும் அங்கு நுழைந்து பரவி வேரூன்றி வளர்ந்து வருகின்றன. இயற்கை வாழ்வு வாழ்ந்து வந்தவர்களிடையே இன்று செயற்கை வாழ்வு தோன்றிவிட்டது. புலன்களின் வழிப்பட்ட ஆசைகளில் மயக்கமும் மிதமீறிய ஆடம்பர வாழ்க்கையில் விருப்பமும் ஏற்கனவே அழியுந் தருவாயிலுள்ள உன்னதமான கிராம வாழ்க்கையின் நாசத்தை துரிதப் படுத்தி வருகின்றன. இற்றை நாள் கிராம வாழ்வின் இலட்சணம் இது ஒரு சிறிதாகும்.

மீண்டும் புத்துயிரளிக்கும் விதம்.

அப்படியானால் நாம் செய்யவேண்டுவது யாது? நம் நாடு சுதந்தரமடைந்து அதி உன்னத வாழ்வடைய நமக்குச் சிறிதளவாவது அந்தரங்காபிமானம் இருக்குமாகில் இன்றே அழியுந்தறுவாயில் வந்துவிட்ட கிராமங்களில் புத்துயிர் எழுப்ப முயலல்வேண்டும். கிராமந்தரங்களே நாட்டின் உயிர் நிலை என்பதைச் செவ்வனே மனதில் இருத்தவேண்டும். கிராமப் புனருத்தாரண விஷயமாய் ஒவ்வொரு உண்மைத் தேசாபிமானியும் மிகுந்த கவலை யெடுத்துக்கொள்ள வேண்டுவது அத்தியாவசியமாகும், மற்றப்படி மேடைகள் மீது நின்று பிரசங்கஞ் செய்வதாலும், பத்திரிகைகள் வாயிலாக எழுதுவதாலும் மட்டுமே ஒன்றும் அதிகமாகச் சாதித்து விட முடியாது, நகர்ப் புறங்களில் மட்டும்

கிளர்ச்சி செய்வதில் பயனில்லை. இது தேர்ந்த அனுபவ உண்மையாகும். இற்றை நாள் கிராம நிர்மாண வேலை சற்றுச் சிரமசாத்தியமான காரியமேயாகும் என்பதையும் மறுக்கொணுது. இருந்தாலும் பின்னல் நேரிடலாகும் அபரிமித நன்மையை உத்தேசித்து ஒவ்வொருவரும் தத்தம்மால் இயன்றவரை நாட்டின் விஷயத்தில் தியாக புத்தியுடனும் பொறுமையோடும் வேலை செய்தே யாகவேண்டும். கிராம வாழ்க்கையைப் புதுப்பிக்கும் விஷயமாய் உழைப்பவர்கள் சுகாதாரம், பொருளாதாரம் இவைகளில் தேர்ந்த அறிஞர்களாயிருப்பது மிகவும் உசிதமானதாகும். இவர்கள் உடல், பொருள், ஆவி இவைகளைப் பொருட்படுத்தாது கிராமந் தோறும் சென்று அங்குள்ள கிராமவாசிகளிடையே நம்பிக்கையும், சந்தோஷமும் நிரம்பியதான புதுவாழ்க்கையை விளைவிக்க வேண்டும். இது விஷயத்தில் கிராமவாசிகளும் சும்மாயிராமல் தங்களாலேன்ற உதவிபுரிதல் மெத்த அவசியம். அவர்கள் ஒற்றுமை உதவியின்றி எதும் அதிகமாக நன்மை செய்துவிட முடியாது. மேலும், தங்களது காரியங்களைத் தாமே நிர்வகித்துக்கொள்ள அவர்கள் பயில வேண்டும். முயற்சியுடன் தங்கள் காரியங்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ளுபவர்களுக்குத் தான் தெய்வ சகாயமும் கிடைக்கிறது. எனவே, கூடிய மட்டில் தன்கையே தனக்கு உதவியாகக் காரிய நிர்வாகஞ் செய்து கொள்ளுந் திறமையும் ஒன்றியாய் முடியாதனவற்றை ஒற்றுமையால் சாதித்துக் கொள்ளும் இயல்பும் அவர்களிடையே படியவேண்டும். கிராமவாசிகள் இவ்வாறு ஆவதற்கு தேச நன்மையை நோக்கமாய்க்கொண்டு முற்ற முடிந்த பரந்த வழிகளில் தயாரிக்கப்பட்ட அனுபவமான கல்வித்திட்டமே வேண்டுவதாகும், "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" தற்காலக் கல்விமுறை இவ்வழியில் சற்றும் பயனற்றதாயிருக்கிறது. நம் பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய உண்மையான அனுபவ ஞானத்தை இது ஒரு

சிறிதும் அளிக்கவில்லை. நமக்கு நாமே ஆழ்ந்து யோசிக்கும் ஆற்றல் நமக்கு இல்லை. அறிவு வளர்ச்சிக்கான வழிகளில் தற்காலக் கல்வி அமையப் பெற்றிருக்கவில்லை. நம் நாட்டில் இதுவரை தோன்றியுள்ள பெரியார்களின் வாழ்க்கை வரலாறும் அவர் தம் உத்தம போதனைகளும் நாம் உணர்ந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கவில்லை. தொழில் ஞானத்தை யளிப்பதாகவும் இஃது இல்லை. உண்மையான உன்னத வாழ்வு நடத்தவும், நற்குணங்கள் யாவும் குடி கொள்ளவும், சுயநலமகற்றிப் பரநலமும் தேசபக்தியும் நம்மிடைத் தோன்றி விளையவும் கற்பிக்காத கல்வி முறையால் நாட்டிற்கு ஏது பயன்? கிராமப் புனருத்தாரண விஷயத்தில் தயாரிக்கப்படும் கல்வித் திட்டமானது உண்மையான நன்மைகளைச் செய்வதாயிருக்க வேண்டும். அஃது அனுபவமானதாகவும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பயப்பதாகவும் இருக்கவேண்டும். தேகபலமும். மனோவன்மையும், பரந்த நோக்கும், விரிந்த அறிவும் அளிக்கத்தக்கதாவும் அஃது அமைந்திருக்க வேண்டும். பொருளாதாரச் செழிப்புக்குக் காரணமான பலதிறப்பட்ட தொழில் முறைகளைப் பற்றிய ஞானமும் புகட்டுவதாயிருக்க வேண்டுவது மிக்க அவசியம். இவ்வழிக் கல்வி தான் உண்மையான பயனூட்டுவதாகும். உன்னத வாழ்வு நடத்த இதுவே சாலவும் உதவி செய்யும். இத்தகைய கலாஞானம் ஏைழமுதல் செல்வவந்தர் வரை யாதொரு சிரமும் இன்றி அடைவதற்கான வழிகளில் பரப்பப்படவேண்டும். ஆரம்பக் கல்வி இலவசமாக அளித்தற்கான சாதனங்கள் நாடெங்கும் விரைவில் பெருகச் செய்ய இன்றே முயற்சி எடுத்துக் கொள்ளவேணும். இக்காரியத்தைத் தொடங்கி நடத்த மிகுதியும் செல்வாக்கும், தியாகபுத்தியும் நிரம்பிய செல்வ வந்தர்கள் முன்வர வேண்டுவது இன்றியமையாத தாகும். இம் முறையில்தான் பெரிதும் ஏழைமக்கள் கூட நலம்பெற இடம் ஏற்படுகிறது. அவர்களுக்கு எழுதவும் படிக்கவும்

தெரியவேண்டுவதோடு கணக்கு, சரித்திரம், பூகோளம், சுகாதாரம் இவைகளிலும் பயிற்சி ஏற்படவேண்டும். புராதன கைத்தொழில்களான கைராட்டினத்தில் நூற்றல், கைத்தறியில் நெய்தல், தச்சுவேலே, விவசாயம் இவைகளை மறுபடியும் புதுப்பித்து நாட்டின் செல்வ நிலேயைப் பெரிதும் உயர்த்தவேண்டும். நியாயமான அளவு இக்கைத் தொழில் முறைகளில் தற்காலம் நூதனமாய் மேல்நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்டு அனுஷ்டானத்தில் இருந்துவரும் முன்னேற்றத்திற்கான சீர்திருத்தங்களைப் புகுத்தி ஒழுகி வருவது மிகுதியும் நன்மை பயப்பதாகும். இன்றியமையாத சாதனங்கள் யாவற்றையும் தன்னகத்தே மிகைபடக் கொண்டுள்ள நம் நாட்டில் சரியான வழியை மட்டும் நாம் அனுசரிப்போமானுல் வெகு சீக்கிரமாகவே ஏனைய நாடுகளிலும் பொருளாதார உன்னதம் ஏற்படும் என்பதில் சற்றும் ஐயமில்லே. தொழிற் கல்வி மூலமாகவே நம் இளைஞர்கள் பிற்காலம் யாதொரு கவலேயுமின்றி சுயேச்சைச் சுக வாழ்வு வாழ அனுகூலம் ஏற்படும். அன்னியர் கைக்கீழ் அடிமைப்பணியைத் தேடி ஏமாற்றமடையாமல் மானமாய் ஜீவிக்க வகை பிறக்கும். மேலும் நம் நாட்டுச் சிறுர்களுக்கு இளமைப் பருவந் தொட்டே பெரியார்களின் வாழ்க்கைத் தத்துவங்களும் வீரர்களின் மாண்பும் அடிக்கடி சிறுசிறு பிரசங்கங்கள் மூலம் போதிக்கப்படவேண்டும். இதுவழியே அவர்களிடை மதப்பற்றும், தேசபக்தியும் மற்றும் உண்டான உன்னத லட்சயங்களும் அமைய சந்தர்ப்பம் ஏற்படும். இம்மாதிரி சரியான வழிகளில் நாடெங்கும் போதிக்கப்படும் கல்வி நம் உன்னத லட்சயங்கள் யாவும் கைகூடவும், நம் தேயம் உலகத்திலேயே எல்லாவிதங்களிலும் முதன்மையான ஸ்தானம் வகிக்கவும் பெருத்த சாதகம் புரிகின்றது. எத்தகைய இடருக்கும் அபாயத்திற்கும் அஞ்சா நெஞ்சு வன்மையும், ஆண்மையின் திண்ணிய வலியும், எல்லா விஷயங்களேயும் பற்றிய ஆழ்ந்த அனுபவ அறிவும் உடைய வாலிபர்

களே இது சமயம் இனி எக்காலத்தும் பிரகாசத்தோடு விளங்குமாறு நம் நாட்டின் சுதந்தரக் கொடியை உயர்த்தி நாட்ட வல்லவராவர். அவர்களே கிராமப் புனருத்தாரணத்தால் நாட்டின் நன்மையைப் பலவிதத்தும் அதிகரிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்கள். அன்னோர்தான் தேச பக்தியிற் சிறந்த வீரர்களுமாவர். ஒளியும் புகழும் ஒருமிக்க அடைவதும் அவரேயாம். எனவே, நம் நாட்டின் உயிர் நிலையாகும் கிராம வாழ்க்கையிலே பொருளாதார உயர்ச்சிக்குக் காரணமான விவசாய முன்னேற்றம், கைத்தொழில் அபிவிருத்தி, கூட்டுறவுச் சங்க ஸ்தாபனம் இவற்றையும், மற்றும் நோயற்ற வாழ்வுடன் நீடிய புனித வாழ்வு நடத்தத்தக்க இதர சாதனங்களையும் நிலை நிறுத்த எண்ணிக்கையற்ற இளம் வாலிபர்கள் துரிதமாய் முன் வர வேண்டுமாயும் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் சர்வ மங்களங்களையும் அருளுமாறும் மனப்பூர்வமாய் பிரார்த்திக்கின்றோம். பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

திமிங்கில வகையைச் சேர்ந்த ஒரு மீனுக்கு எட்டு வரிசை பற்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வரிசையிலும் 300 பற்கள் இருக்கின்றன. எனவே, மொத்தம் 2400 பற்கள் இருக்கின்றன எனப்படுகிறது.

லண்டனில் மேபேர் ஓட்டல் என்ற ஒரு ஓட்டல் இருக்கிறது. அதில் வட்டில்கள் கழுவும் மின்சார இயந்திரம் ஒன்று இருக்கிறது. அது பிரிட்டனிலேயே செய்யப்பட்டது. மணி ஒன்றுக்கு 8000 வட்டில்களை அது கழுவுகிறது.

வட மலையாளத்தில் எடத்வா என்ற ஊரில் ஒரு செல்வ நாயர் குடும்பத்தைச் சேர்ந்த பரமேசுரன் என்ற ஐந்து வயதுள்ள ஒரு சிறுவன் பெரிய யோகியாயும் ஆத்ம ஞானியாயும் விளங்குகிறான். அவன் காலையிலும் மாலையிலும் யோக சமாதியில் இருக்கிறானும். அவனைப் பெரிய அவதார புருஷரென்று ஜனங்கள் கருதிப் போற்றுகிறார்களாம்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத் தலைவன்

1-வது அத்தியாயம்

மூன்று சிறுவர்கள்

நமது கதை பதினேழாம் நூற்றாண்டில் மகாராட்டிர தேசத்தில் "சௌக்" என்னும் ஒரு சிறு கிராமத்தில் தொடங்குகிறது. அக் காலத்தில் மகாராட்டிர தேசம் சுதேச அரசாட்சியில் இல்லை. பீஜப்பூர் சுல்தான் என்னும் முகமதிய அரசன் மகாராட்டிர தேசம் முழுவதையும் தன் மனம் போனபடி ஆண்டு வந்தான். சுல்தான் அரசாட்சியில் மராட்டியர்களுக்கு அமைதி யுண்டாக வில்லை. முகம்மதிய உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் அவர்களை ஆடுமாடுகளைப்போல் நடத்தினார்கள். ஏனென்றால் மராட்டியர்கள் இந்துக்கள் ஆகையால் முகம்மதிய உத்தியோகஸ்தர்கள் அவர்களை வெறுத்தார்கள். கலியாண மாகாத கன்னிப் பெண்களை கவர்ந்து கொண்டு போய் கட்டாயப் படுத்தி முகம்மதியர்களுக்குக் கலியாணம் செய்வதும் வழக்கமா யிருந்தது. மகாராட்டிரர்களின் சொத்துச் சுதந்தரங்களும் சுய மரியாதையும் கவனிக்கப் படவில்லை. ஆள்வோராகிய முகம்மதியருக்கும் ஆளப் படுவோராகிய மராட்டியருக்கும் இடையில் வேற்றுமை யுணர்ச்சி அதிகமா யிருந்தது. குடி மக்கள் ஒரு ஜாதியார்; அரசாங்கத்தார் இன்னொரு ஜாதியார்; குடிகள் பாஷை ஒன்று, அரசாங்கத்தாரின் பாஷை வேறொன்று; மகாராட்டிரர் வழக்க ஒழுக்கங்கள் வேறு, முகம்மதியரின் வழக்க ஒழுக்கங்கள் வேறொன்று; இவர்கள் சமயம் ஒன்று அவர்கள் மதம் அதற்கு மாறுபட்ட மற்றொன்று. இப்படி யிருந்தாலும் ஒருவருக்கொருவர் சகோதரர் போல வாழக் கூடாதா? இப்போது, முகம்மதியரும் கிறிஸ்தவரும் இந்துக்களும் ஒருவருக்கொருவர் சகோதரர்போல் வாழ்ந்துவரவில்லையா?

ஆனால், பதினேழாம் நூற்றாண்டில், அதாவது இரு நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னே இவ்விதம் அவர்

கள் வாழவில்லை. இந்துக்களாக விருந்த மராட்டியர்களை முகம்மதியர் வெறுத்தார்கள். இந்துக்களை சில சமயங்களில் பலாத்காரப் படுத்தி முகம்மதிய ராக்குவார்கள். பீஜப்பூர் சுல்தான், மகாராட்டிர தேசத்துக் கப்பால் வெகு தூரத்தில் வசித்து வந்தபடியால், அவனால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் திருப்திகரமாகவும் நம்பிக்கை யுண்டாகும்படியும் நடந்து கொள்ளவில்லை. முகம்மதிய சிப்பாய்களின் ஆதிக்கம் அளவு கடந்ததா யிருந்தது. குடியானவரின் சொத்துக்கும் பொருளுக்கும் உயிருக்கும் ஆபத்துக்கள் இருந்து கொண்டே இருந்தன. சுருங்கச் சொல்வ தென்றால் மகாராட்டிர தேசம் மிகுந்த குழப்பமடைந் திருந்ததென்றே சொல்லலாம். இதற்கு இன்னொரு காரணமு முண்டு. அஃதென்ன வென்றால் டெல்லியிலிருந்து அரசாண்ட கீர்த்தி பெற்ற மொகலாய சக்கர சக்கரவத்தி, பீஜப்பூர் சுல்தான் கைவசமுள்ள மகாராட்டிர தேசத்தைத் தான் கைப்பற்ற வேண்டு மென்று கண்ணுங் கருத்துமா யிருந்தான். இதனால் பீஜப்பூர் அரசனுக்கும் டெல்லி சக்கரவர்த்திக்கும் எப்பொழுது சண்டை தொடங்கி விடப் போகிறதோ என்று மராட்டியர்கள் மிகுந்த பயங் கொண்டிருந்தார்கள். இச்சமயத்தில், 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது போல, தேசம் இருக்கும் நிலைமையைக் கண்டு கொள்ளைக்காரர்கள் எங்குந் தலை தூக்கித் திரிந்தனர். கொள்ளைக் கூட்டத்தாரை அடக்குவதற்காகவும் குழப்பங்களைத் தணிப்பதற்காகவும் முகம்மதிய பட்டாளங்கள் அனுப்பப் பட்டனர். ஆனால், இந்த முகம்மதிய சிப்பாய்களால் மகாராட்டிய மக்களுக்குத் துன்பமும் துயரமுந்தான் உண்டாயின வென்று கதைப்போக்கால் நன்கு விளங்கும்.

ஆனால், மகாராட்டிரர்கள் உணர்வு கெட்டவர்க ளல்லர். அவர்கள் மானமுடைய ஜாதியார். தங்கள் சுதந்தரத்துக்காகவும் சுய மரியாதைக்காகவும் தங்கள் உயிரைக் கொடுப்பவர்கள். முகம்மதியர் செய்யும் அட்டூழியங்களையும் அநியாயங்களையும் பொறுமையுடன் சகித்து வந்தார்கள் என்றாலும் அவர்களுக்குள் பெரியதோர் மன உணர்ச்சி ஏற்பட் டிருந்தது. அதுதான் சுதந்தர உணர்ச்சி; சுய ராஜ்ய உணர்ச்சி; சுய மரியாதை யுணர்ச்சி; அவர்கள்

அன்னிய அரசாட்சியை ஒழித்து விடவேண்டும் என்று உறுதியாக எண்ணங் கொண்டிருந்தார்கள். கன்னிப் பெண்களின் கற்பைக் காப்பதற்கும், இந்து சமயத்தை நிலைக்கச் செய்வதற்கும், அடிமைத் தனத்திலிருந்து மீள்வதற்கும், சுதந்தரம் பெற்று சுய மரியாதையுடன் வாழ்வதற்கும் உறுதியாக எண்ணங் கொண்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் அடைய வேண்டுமானால் அன்னியர் அரசாட்சியைத் தொலைத்து விட்டு சுய ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்னும் எண்ணம் அவர்கள் மனத்தில் பசுமரத் தாணி போல் பதிந்து விட்டது. இந்த விடுதலை யுணர்ச்சி மகாராட்டிர தேசமெங்கும் ஆண் பெண், முதியோர் இளையோர், ஏழை பணக்காரன், இல்லறத்தான் துறவறத்தான் முதலிய எல்லோர் மனதிலும் ஊன்றிப் பதிந்து விட்டது. எல்லா மக்களும் தேசத்தின் நன்மைக்காக—விடுதலைக்காக, தங்கள் இரத்தத்தைச் சிந்த ஆவலுடன் ஆயத்தமாக விருந்தார்கள். இந்த விடுதலை உணர்ச்சி நாளுக்குநாள் வேரூன்றி வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால், அவர்களுள் இன்னும் தலைவன் ஏற்படவில்லை. "கடவுள் ஒரு தலைவரை அனுப்பப் போகிறார். அவர் விரைவில் இங்கு வந்து விடுவார். அவரைத் தலைவராகக் கொண்டு எங்கள் தேசத்திற்காக எங்கள் இரத்தத்தைச் சிந்தும் நாள் நெருங்கி விட்டது" என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள். இவ்விதம் சுதந்தர உணர்ச்சி வேரூன்றி யுள்ள மகாராட்டிரர்கள் தங்கள் தலைவரை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் நாளில் தான் மகாராட்டிர தேசத்திலுள்ள "சௌக்" என்னும் ஒரு சிறு கிராமத்தில் நமது கதை ஆரம்ப மாகிறது.

இந்த சௌக் கிராமம் பம்பாயிலிருந்து பூனா நகரத்திற்குச் செல்லும் வழியிலுள்ள ஒரு சிறு கிராமம். இக் கிராமத்தைச் சுற்றிலும் குளிர்ந்த சோலைகளும் பசுமையான வயல்களும் பரந்த மைதான வெளியும் உண்டு. இக் கிராமத்தின் வழியாகத்தான் "தௌரி" என்னும் ஒரு நதி தவழ்ந் தோடிக்கொண் டிருக்கிறது. இப்போது மாலை வேளையாதலால், சூரியன் அடி வானத்தில் இழிந்து கொண்டிருக்கிறான். மேல் வானத்தில் பல நிறங்களை யுடைய செவ்வானம் மிக்க வனப்புடன் விளங்குகிறது. அந்தி மாலையின் அழகும், சோலைகளின் பசுமையான காட்சியும்

நட்டாஜி

வயல்களின் இனிய தோற்றமும் பறவைகள் பாடும் இனிய குரலும் இன்பமாக வீசும் மென்மையான காற்றும் மன திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. இவற்றைவிட அதிக மகிழ்ச்சியைக் கொடுப்ப தென்ன வென்றால் ஆற்றங் கரை யில் மன மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருக்கும் மூன்று சிறுவர்களின் அழகான முகங்களே. இப் பிள்ளை களில் மூத்தவனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கலாம் இச் சிறுவன் தன் வயதுக்குத் தக்கவளவு உயரமும் தேகக் கட் டும் சுறுசுறுப்பும் உள்ளவனாய்க் காணப் படுகிறான். இவன் பெயர் நட்டாஜி. இவன் சந்தோஷமாகப் பாடிக்கொண்டே ஒரு மூங்கில் தடியால் ஆற்றங் கரையில் செழிப்பாக வளர்ந் திருக்கிற ஒரு அடர்ந்த புதரை ஓங்கி ஓங்கி அடித்துக் கொண் டிருக்கிறான். அடியுண்ட செடியி லிருந்து பால் வடிந்து ஒழுகுகிறது. அவனது சிவந்த நிறமுள்ள தலைப் பாகை கீழே விழுந்து கிடக்கிறது. இந்த மராட்டியச் சிறுவன், மாலைக் காட்சிகள் ஒன்றையும் கவனிக்காமல், மகாராட்டிர வீரர்கள் போர் செய்யும்போது பாடும் பாட் டைப் பாடிக் கொண்டே, தான் அச்சமயம் முகம்மதிய சிப்பாய்களுடன் போர் செய்வதாக நினைத்துக் கொண்டு கோபத்துடன் அந்தச் செடியை அடித்துக்கொண் டிருக் கிறான்.

அவனுக்கு அருகில் விளையாடிக்கொண் டிருக்கும் இரண்டு பிள்ளைகளும் சின்னஞ் சிறுமிகள். கங்காபாய் என்னும் சிறுமிக்கு ஏறக்குறைய ஒன்பது வயதிருக்கும், இவள் நட்டாஜியின் சகோதரி. காஷிபாய் என்னும் மற் றொரு சிறுமிக்கு ஏழு வயதிருக்கும். இச் சிறுமி செல்வ வந்தரான தாதாஜி என்பவரின் ஒரே மகள். தாதாஜி, நட்டாஜி என்னும் சிறுவனுக்கு மாமன் ஆகையால் காஷி பாய் இவனுக்கு நெருங்கிய உறவினள். நட்டாஜி போர் வீரனைப்போல் பாடிக்கொண்டு செடியைத் தடியால் அடிப் பதைக் கண்டு இந்த இரண்டு சிறு பெண்களும் அவனருகில் சென்று நின்றார்கள். நட்டாஜி இவர்களைக் கவனிக்காமல், செடியை யடிப்பதைக் கண்டு, காஷிபாய் "அடே சிப்பாய்! நன்றாகச் சண்டை செய். அப்படித்தான் நன்றாய் அடி. அதோ பார்! முகம்மதிய சிப்பாய் இன்னும் சாகவில்லை" என்று சொல்லி அவனுக்கு ஊக்கங் கொடுத்து தைரிய மாகப் பேசினாள்.

கங்காபாய், தன் அண்ணன் மூர்க்கத் தனமாய் செடியைத் தடியால் அடிப்பதைக் கண்டு "அண்ணு! நட்டாயா! ஏன் இப்படி முரட்டுத் தனமாகச் செடியை யடிக்கிருய். அம்மா பார்த்தால் கோபிப்பாள். நேரமாயிற்று; வீட்டுக்குப் போகலாம் வா, இதோ பார்! உன் புதிய தலைப்பாகை தரையில் விழுந்து கிடக்கிறது" என்று சாந்தமாகப் பேசினுள்.

"இல்லை! இல்லை! இந்த பயங்கொள்ளிப் பெண் பேச்சைக் கேட்காதே. நீ இப்படித்தான் முகம்மதிய சிப்பாய்களை எல்லாம் கொன்று கொன்று கொன்று போடவேண்டும். அப்பொழுதுதான் நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்வேன்" என்று காஷிபாய் என்னும் சிறுமி சிரித்துக் கொண்டே சொன்னுள்.

நட்டாஜி இச் சிறு பெண்கள் பேசியதைக் கவனிக்காமலே செடியை ஓங்கி ஓங்கி அடித்த வண்ணமாய் உரத்த குரலாகப் பாடிக்கொண் டிருக்கிருன்.

இதற்குள்ளாகச் சூரியன் முழுவதும் மறைந்து விட்டான். அழகுடன் விளங்கிய செவ்வானமும் மழுங்கி மறைந்துவிட்டது. மெல்ல மெல்ல இருள் பரவத் தொடங்குகிறது. ஆகாயத்தில், நாலைந்து நட்சத்திரங்களும் வெளிப்பட்டு மின்னுகின்றன. இச் சமயத்தில் வேலைக்காரக் கிழவி ஒருவள் அவ்விடம் வந்து வெகு நேரம் வரையில் அச் சிறுவர்கள் விளையாடிக்கொண் டிருந்து விட்டதற்காகக் கடிந்து பேசி முணு முணுத்தாள். உடனே காஷிபாய், தன் தோழர் இருவரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு தன் மாளிகைக்குப் புறப்பட கிழவி அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தாதாஜியின் மாளிகை நோக்கிச் சென்றுள். நட்டாஜியும், பொழுது பட்டதைக் கண்டு வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். அவன் கீழே விழுந்து கிடந்த தலைப்பாகையை எடுத்து, மகாராட்டிரச் சிறுவர் வர்களின் வழக்கப்படி, தலைப்பாகையைத் தலையில் அழகாகச் சுற்றிக் கட்டிக்கொண்டு தன் தங்கை கங்காபாயுடன் தன் வீடு நோக்கிச் சென்றுன்.

பானம்.

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

நீர்.

உயிரையும் சுகத்தையுங் காத்துக்கொள்வதற்கு அவசியமான எல்லாப் பொருள்களிலும், நீரைப்போல் முக்கியமானது வேறொன்றுமில்லை. வேறு வகையான ஆகாரமில்லாமலே சிறிது காலம் நீரைக் குடித்துப் பிழைப்பது கூடும். ஒருவன் மரக்கறியுணவு சாப்பிடாமலிருக்கக் கூடும். இன்னொருவன் மாமிசவுணவு சாப்பிடாமலிருக்கக் கூடும். மற்றொருவன் முட்டை சாப்பிடேனென்று நீக்கியிருக்கக்கூடும்; ஆனால், எவனும் நீரைமட்டும் அருந்தாமலிருக்கக் கூடுமானதல்ல. ஆதலால், எல்லா ஆகாரங்களினும் நீரே தேக போஷணைக்கு முக்கிய ஆகாரமாகும்.

நமது தேகத்தின் மொத்த எடையில், ஏறக்குறைய முக்கால் பங்கு நீரிருக்கின்றது. நூறு பவுண்டு எடையுள்ள ஒரு சிறிய மனிதனுடம்பு, எழுபது பவுண்டு அல்லது சிறிது அதிகமாக நீர் கொண்டிருக்கும். ஆகையால், தேக முழுதும் ஏறக்குறைய நூற்றுக்கு எழுபத்தொரு பவுண்டு நீரிருக்கலாமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்நீர், தேகத்தின் பல வுறுப்புகளில் சமமாகச் சேர்ந்திராமல் சிறிது எலும்பிலும், சிறிது தோலிலும், சிறிது தசையிலும், சிறிது கொழுப்புச் சவ்வுகளிலும் (fatty tissues) குருத் தெலும்புகளிலும் (cartilage), ஈரலிலும், எலும்புகளிலுள்ள மூளையிலும் (Marrow), இரத்தத்திலும், சுவாசாசயத்திலும் (Lungs), மூத்திராசயத்திலும் (Kidney) சேர்ந்திருக்கிறது. அன்றியும், அந்நீர் பித்த நீராகவும் (bile) கணைய நீராகவும் (pancreatic Juice), அன்ன ரசமாகவும் (chyle) நிணநீராகவும் (limph) குடலிற் பொசியும் இரசமாகவும் (intestinal Juice), கண்ணீராகவும் (tears), சீரண நீராகவும் (gastric Juice), உமிழ் நீராகவும் (Saliva) வேர்வை நீராகவும் பெருகின்றது.

நடுத்தரமான வொருமனிதன், தோலின் மூலமாகவும், சுவாசாசயத்தின் மூலமாகவும், மூத்திராசயத்தின் மூல

மாகவும் 24-மணி நேரத்தில் ஏறக்குறைய 80 முதல் 100 அவுன்ஸ் வரையில் நீரைக் கழிக்கின்றான். இவ்விதமாக வேர்வையினாலும், மூச்சுவிடுவதாலும், மூத்திரத்தினாலும் கழியும் நீரை மீண்டும் நிரப்புவதற்குத் தினந்தோறும் $3\frac{1}{2}$ பயிண்டிலிருந்து 5 பயிண்டு வரையும் நீரை ஈடுசெய்தல் வேண்டும். எல்லா ஆகாரங்களும் சிறிது நீரைக்கொண் டிருக்கின்றன.

உலர்ந்த பட்டாணி, சோளம், ஓட் (Oat) வெண் ணெய், பார்லி, கோதுமைமா, அரிசி, பேரீச்சம்பழம், ரொட்டி, பலவித முட்டைகள், கோழி, இளமாமிசம், வாழைப்பழம், மச்சம், உருளைக்கிழங்கு முதலிய பல பொருள்களிலும், சிறிதளவு நீரிருக்கின்றது. இவ்வித ஆகாரங்களை யுண்பதால் அவற்றிலுள்ள நீர் நம்முடைய உடம்பில் சேருகின்றதாயினும் அது போதாது. ஆதலால், எவ்வகை பானத்தாலாகிலும் $2\frac{1}{2}$ அல்லது 3 பயிண்டு நீர் உடம்பில் சேரவேண்டும்.

ஒவ்வொரு உள்ளுறுப்பிலும் ஓரளவாக நீர் எப் போதும் இருந்துகொண் டிருக்கிறதென்று மாத்திரம் எண்ணுதல் கூடாது. ஆனால், அந்நீர், தேகத்தில் மாறு மல் ஓடிக்கொண்டே ஒவ்வொரு உறுப்பையும்விட்டு நீங்காம லிருக்கின்றது.

தேகத்திற்கு நீர் இன்றியமையாதது.

காட்டிலுள்ள பெரிய விருக்ஷம் அல்லது புல்லின் தளிர் (blade of grass) பலமுள்ள சிங்கம் அல்லது நுண்மை யான கிருமி, சிறுபூச்சி, ஆகாயத்திற் பறக்கும் பட்சி, கடலில் வாழும் மச்சம் முதலிய எல்லா வுயிருள்ள பொருள் களுக்கும் நீர்ப்பகுதி வேண்டுவது மிக முக்கியமாகும். அதுபோலவே, மனித தேகத்தில் எலும்பு, தசை, இரத்தம், நரம்பு இவைகட்கு நீர் முக்கிய பகுதியாகின்றது. ஆதலால், நாம் உண்ணும் கடினமான ஆகாரங்களைப் போலவே நீரும் ஆகார மாகின்றது. நாம் ஆகாரமாக உட்கொள்ளும் நீர், சுத்தமா யிருத்தல் வேண்டும். அந் நீரில் ஏதேனும் அசுத்த மிருந்தாலும், வியாதிக் கிருமிக ளிருந்தாலும் அவ் வாகாரங் கெட்டு, உள்ளுறுப்புக்களுக்குந் தீங்கு நேரிடும். அதனால், நாம் நோயினால் துன்பப்பட நேரிடும்.

நாம் உட்கொள்ளும் நீர் ஆகாரமாவது மன்றி, உடம்பி னுள்ள அசுத்தங்களைப் போக்கி, அவ் வுடம்பைச் சுத்தமாக வைக்கின்றது.

தேகம், தினந்தோறும் உழைப்பதினல், தேகத்தில் அசுத்தப் பொருள்கள் அதிகமாக வுண்டாகின்றன. அவ் வசுத்தங்களை வெளிப் படுத்தாவிடின், உபயோக மற்றதும் அபாயத்திற் கிடமானதுமான அவ் வசுத்தங்கள் இரத்தத் திற் கலந்துவிடும். அவ்வசுத்தங்களை வெளிப் படுத்து வதில் நீர் செய்யும் வேலை யென்னவென்று பார்ப்போம். நாம் உண்ணும் ஆகாரங்களில் தசையை வளர்க்கும் பொருள்களிருக்கின்றன. (Nitrogenous substances) அவற் றின் தசையை வளர்க்கும் வேலையில் யூரியா (Urea) வென் னும் அசுத்தப் பொரு ளுண்டாகின்றது. அவ் வசுத்தப் பொருள் இரத்தத்தில் சேருமாயின் இரத்தம் விஷத்தன்மை யடைந்து, சீக்கிரத்தில் உயிருக்கும் ஆபத்துண்டாகும்; ஆனல், மூத்திராசயங்களுக்கு மேற்சொன்ன யூரியா வென் னும் அசுத்தப் பொருளை வெளியே கழிக்கும் சக்தி யிருப்ப தால், இரத்தத்திற் கலந்துள்ள அசுத்தம் மூத்திராசயங் களிற் சேர்ந்து, அவற்றின் வழியாக மூத்திர ரூபமாய் வெளியே கழிகின்றது. இவ்வாறு ஒரு நாளைக்கு 3 பயின்டு நீரும் ஏறக்குறைய $1\frac{1}{4}$ அவுன்ஸ் யூரியாவும் உடம்பிலிருந்து கழிவதால் அதிக நீர் உட்கொள்ள வேண்டியதிருக்கிறது.

இன்னொரு அசுத்தமான பொருள் கரியமிலவாயு (Carbonic acid gas). இவ்வாயு, கரி சம்பந்தமான ஆகா ரம் உஷ்ணமாகவும் சக்தியாகவும் மாறுவதால் உண்டாகின் றது. நாம் மூச்சு விடும்போது சுவாசாசயத்தி லிருந்து, ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய இரண்டு பவுண்டளவு கரியமில வாயுவும் முக்கால் பவுண்டளவு நீராவியும் இரத் தத்தின் உதவியால் கழிகின்றன.

மூன்ருவது, நீரானது, தேகத்தைச் சுகமாக வைப்ப தற்கும், தேகத்தி லுண்டாகும் அசுத்தப் பொருளை வேர் வையின் மூலமாகக் கழிப்பதற்கும் உதவியாகிறது. உடம் பின் தோல் நல்ல நிலைமையி லிருக்கு மாயின், இச் செயல், எப்போதும், அதாவது, நாம் வேர்வையின் உணர்ச்சியை உணராதபோதும் உணரும்போதும் நடந்து கொண்டே யிருக்கிறது. மனித வுடம்பின் தோலில் வேர்வைக் கோளங்

கள் இருபது லட்சத்திற்கு மேற்பட் டிருக்கின்ற தெனத் தொகை யிடப்பட் டிருக்கின்றது. ஒரு வேர்வைக் குழலை (Sweat duct or tube)க் கோணவில்லாமல் சரிவர நேராக்கினல் அது, ஏறக்குறைய கால் ($\frac{1}{4}$) அங்குல நீளமிருக்கும். ஆகவே, எல்லா வேர்வைக் குழலின் மொத்த நீளம், ஏறக் குறைய பத்து மைல் (10 miles) இருக்குமெனக் கணக் கிடப்பட் டிருக்கிறது. உடம்பின் தோலிலிருந்து எவ்வளவு நீர் கழிகிறது? உடம்பின் தோலிலிருந்து தினந்தோறும் நீராவியாகக் கழியும் நீரின் சராசரி அளவு ஏறக்குறைய இரண்டு பவுண்ட் ஆகிறது. உடம்பின் தோல் நல்ல நிலை மையி லில்லாதபோது, அது, வேலை செய்வதற் கில்லாமல், சுவாசாசயமும் மூத்திராசயமும் அதிக வேலை செய்ய வேண்டி வருகிறது. சுவாசாசயத்திற்கும் இரத்தத்திற்கும் மிகுதியும் சுத்தமுமான காற்று வேண்டியது போலவே, உடம்பின் தோலை நல்ல நிலைமையில் வைப்பதற்குச் சுத்த மும் பிரயோசனமு முள்ள நீர் மிகுதியாக வேண்டும்.

சீரண ரசங்களிலுள்ள நீர்

நீரானது, தேகத்திலுள்ள அசுத்தங்களை வெளியே கழிப்பது மன்றித் தேகத்தில் நீர் சுவறி (moist) யிருக்க வும், நாமுண்ணும் ஆகாரங்களைக் கரைக்கவும் உதவியாகின் றது. கரைந்த ஆகாரம் இரத்தத்திற் கலந்து, தேகமெங்கும் பரவி, எல்லா வுறுப்புக்களையும் போஷிக்கிறது. அதனுல், நம்முடைய தேகம் பார்ப்பதற்குச் சதை பிடித்துப் பருத் துப் பொலிவுற் றிருக்கிறது.

உமிழ் நீர் தினந்தோறும் இரத்தத்திலிருந்து ஒன்று முதல் இரண்டு பவுண்டு உண்டாகின்றது. இவ் வுமிழ் நீர், கரையக் கூடாத பசைமா (Starch) உணவைக் கரையக் கூடிய சர்க்கரையாக மாற்றுதற்கு மிக முக்கியமானது. 10,000 பங்கு உமிழ் நீரில் 9,940 பங்கு நீரிருக்கின்றது.

தீபனநீர் (Gastric Juice), தசையை வளர்க்கும் ஆகாரங்களைக் கரையச் செய்கின்றது. 1000 பங்கு தீபன இரசத்தில் 994 பங்கு நீரிருக்கின்றது.

பித்தநீர் (The bile Juice), கொழுப்பான ஆகாரங்களை வழுவழுப்பான குழம்பாக்குகிறது. 1000 பங்கு பித்த இரசத்தில் 859 பங்கு நீரிருக்கின்றது.

கணையநீர் (Pancreatic Juice), மற்றச் சீரண இரசங்களால் சீரணிக்கப்படாமற் போன ஆகாரப் பகுதிகளைக் கரைத்து விடுகிறது. 1000 பங்கு கணையநீரில் 980 பங்கு நீரிருக்கின்றது.

மேற் சொல்லியவை யெல்லாம், மனிதவாழ்க்கைக்குத் தண்ணீர் எவ்வளவு முக்கியமான தென்று காட்ட உதவியாகின்றன. ஆகையால், இயற்கையில் மனித தேகத்தை நிருவகிப்பதற்குத் தண்ணீரினும் வேறு பொருள் இல்லையென்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

தண்ணீர் தான் தாகத்தைத் தணிக்கும்.

நாம் உபயோகித்து வருகிற தேயிலை நீர், காப்பி நீர், கொக்கோ, லெமனேட், இன்னும் உபயோகத்திலிருக்கிற மற்றப் பானங்களெவற்றிலுந் தாகத்தைத் தணிப்பதும், தேகத்திற்குப் பெரும் பயனைத்தருவதும் எது? மேற் சொன்ன பானங்களில் அடங்கியுள்ள தண்ணீரே யாம். உண்மையில், வெறுந் தண்ணீரே, இயற்கையானதும் அவசியமானதுமான பானமாகும். மற்றப் பானங்களை நீக்கி விட்டாலும் தேகம் எப்போதும் சுகமேயிருக்கும். சாதாரண உபயோகத்திலிருக்கும் பலவித பானங்களாலுண்டாகும் நோய்களினின்றுந் தப்பித்துக் கொள்ளக்கூடும்.

நமக்குத் தாகம் எப்போதுண்டாகின்றது? தேகத்திலுள்ள நீரின் அளவு குறையும்போது தாகவுணர்ச்சியுண்டாகின்றது. சௌக்கியமும் நல்ல போஷணையுமுள்ள தேகத்தில் நாள்தோறுங் கழிகிற கழிவுநீரில் ஏறக்குறைய ஆறிலொருபங்கு அல்லது ஒரு பவுண்டு நீர் கழிந்து போகுமாயின் அப்போது தாகவுணர்ச்சி யுண்டாகின்றது.

தண்ணீரை வாய் வழியாகப் பானஞ் செய்து வயிற்றை நிரப்பித் தாகத்தைத் தணித்துக் கொள்வதினும், உதிர நரம்பின் வழியாக நீரை உட்செலுத்துவதால், தாகத்தை மிகு விரைவில் தணித்துக் கொள்ளலாமென்று தெரிந்திருக்கிறது. தாகமுண்டாகும்போது நீரில் ஸ்நானஞ் செய்வதாலும் தாகந்தணிவதை நாம் உணருகிறோம். இதனாலே, தண்ணீர் வயிற்றுக்கும் குடலுக்குமாத்திரம் தேவையான

தல்ல, தேக முழுவதற்குமே தண்ணீர் தேவை யென்பதாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

தாகம் உண்டாவதற்குப் பல காரணங்களுண்டு. முக்கியமாக உஷ்ணகாலத்திலும், வறட்சியான காலத்திலும், கடுமையான தேகாப்பியாசத்திலும், தேகத்திலிருந்து அதிக நீர்கழிவதிலும் தாகமுண்டாகின்றது. உப்பு அதிகமான உணவுகளைத் தின்பதால் தாகமுண்டாகும். எந்தப் பொருளாலாகிலும் தீபன நீரையும் மற்றச் சீரண இரசங்களையும் சீக்கிரமாகச் சொரியச் செய்தாலும் உடம்பினின்றும் அதிக நீர் கழிகின்றது; அதனாலும் தாக விருப்ப முண்டாகும். வாசனையுள்ள ஆகாரங்கள், சில மருந்துகள், பலவகை மதுபானங்களிவைகளும் தாகவுணர்ச்சியைக் கொடுக்கும். நாம் அசௌக்கியமாயிருக்கும்போதும், நாடியின் நடை (pulse) பட படப்பாயிருக்கும்போதும், உடம்பின் தோல் உஷ்ணமாய் வறண்டிருக்கும்போதும் தாக மெடுக்கும். தாக முண்டாவதற்குக் காரணம் எதுவாயிருப்பினும், தாகத்தைத் தணிப்பதும் அதனைத் திருப்தி செய்வதும் தண்ணீர் ஒன்றே தவிர வேறொன்று மில்லை.

தற்போது அச்சிலிருக்கும் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி—அடுத்த ஆண்டு வெளிவரும். 4 லக்ஷம் வார்த்தை யுடையது. இதன் வேலை தொடங்கி 46 ஆண்டுகள் ஆகிவிட்டன. 12 பேர் இடைவிடாது வேலைசெய்து வந்திருக்கின்றனர். மொத்தச் செலவு 500,000 பவுன்.

ஒட்டகை, தின மொன்றுக்குப் பத்து காலன் அதாவது 60 புட்டி தணணீரும், மூன்று நாளைக்கு ஒருமுறை அதிகமாக 20 காலன் தண்ணீரும் குடிக்குமாம். ஒருமுறை தண்ணீர் குடிக்க அதற்கு 20 நிமிஷம் வேண்டுமாம்.

சென்ற வாரத்தில் மாபினில் ஒரு பர்மிய டாக்டர் தமது மனைவிமீது சந்தேகங் கொண்டு கர்ப்பமா யிருந்த அவளையும் நான்கு குழந்தைகளையும் கொலை செய்துவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்ள முயன்றாராம். வைத்தியர் வைத்திய சாலையில் இருக்கிறார்.

இங்கிலாந்தில் ரயில்கள் வருஷத்திற்கு 42 கோடி மைல்கள் பிரயாணம் செய்கின்றதாம்.

இளையான்குடி மாறநாயனார் சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ. க. வைத்தியலிங்கம் பிள்ளை எழுதியது.

கலிவெண்பா.

களையாகச் செங்கமலங் காதுசெய்கள் சூழ்ந்த
இளையான் குடியெனும்பே ரேய்ந்தே—விளைவுமலி
ஊரதனின் மேழியர்த மொண்குலத்தோர் மாறரெனும்
பாரிலகு நாமம் படைத்துள்ளோர்— சீரிலகு
எல்லையிலாச் செல்வமெலா மெய்தினோ ரீசனடி
அல்லும் பகலு மயர்த்தலிலார்—முல்லைநகைக்
கோற்றொடியாள் கற்பின் குலவிளக்கா டன்னுடனே
ஏற்றமிகு மில்வாழ்க்கை யெய்தியவர்— ஆற்றினொடு
திங்கண் மிலைந்த சிவனடியா ரில்லில்வரின்
அங்கவரைக் கண்டே யகமலர்ந்து—துங்கமிகும்
பாதம் விளக்கிப் பரிவோ டருச்சனைகள்
ஏதமின்றி யாற்றி யிதமுரைத்துச்—சீதமுறும்
நெய்யுந் தயிரு நிறைவிட்டுத் தீஞ்சுவைசேர்
துய்யவமு தூட்டிவருந் தொன்மையினர்— வையமதில்
இவ்விதமாய் நற்றொண் டியற்றிவரு நாளிலிவர்
பௌவமென வொப்பில் பணம்படைத்துக்— கவ்வையின்றி
வாழ்ந்திருந்தா ரெல்லா வளம்படைத்த காலையன்றித்
தாழ்ந்து கொடியமிடி சார்ந்திடினுஞ் — சூழ்ந்தவருக்
கன்ன மளிக்கு மவாவுடையா ரென்பதனைப்
பின்னமின்றிக் காட்டப் பிறைமுடியார்—தொன்மையுள
செல்வமெலாங் குன்றிச் சிறுமையுறச் செய்திடலூர்
தொல்லை யறங்கள் சுருங்காமன்—மல்கியதன்
மாளிகைக டோட்டம் வயலா பரணமுதல்
ஆளுமிவையை விற்று மன்புடனெவ்—வேளையினும்
வந்த வடியர் மனங்களிக்க வின்னடிசில்
சிந்தையுவந் தீந்தார் திறப்பாமல்—அந்தமுடி

மாலயனுங் காணு மறைமுதல்வ ராங்கொருநாள்
ஆலவிட மின்றி யருந்தவர்போற்—சிலமுள
வேடமெய்தி மாரி விடாதுபொழி கார்காலம்
நாடு பசியா னலிபவர்போல்—வாடியவர்
இல்ல மடைத்தபின்ன ரெய்தி யழைத்திடலும்
அல்லலிலார் போந்தவரை யாதரித்து—மெல்லமனைக்
குள்ளே கொடுபோ யுடலீர நீக்கியபின்
தள்ளரிய தூய தவிசுதவிக்—கிள்ளைமொழித்
தாரமெனு நாயகியை நோக்கித் தவத்தரிவர்
தீரப் பசித்தாரென் செய்வதென்று—கூருமன்பால்
ஓதத் தலைவிசொல்வா ளெம்மகத்தி லொன்றுமில்லை
போதுமிகச் சென்றதினிப் போமிடமும்—யாதுளது
பாவியே னேது பகர்வேன் பகல்விதைத்த
தாவிலுயர் நென்முளைக டான்வாரி—மேவியங்கு
கொண்டுவந்தா லின்னடிசி லாக்கிக் கொடுப்பேனென்று
ஒண்டொடியாள் கூற வொருப்பட்டுத்—தண்டுளிகள்
மண்டு மழைசொரிய மார்க்க மிதுவெனவே
கண்டு கொளமுடியாக் காரிருளிற்—றெண்டனார்
சாலவொரு கூடை தலையிற் கவிழ்த்து வழி
காலிற் றடவிக் கழனியிற்போய்ச்—சாலிமுளை
நீரின் மிதந்துவர வாரி நிறையவிட்ட
ஏருலவு கூடைதனை யெடுத்துப்—பாரமுறச்
சென்னி தனிற்சுமந்து சென்றரிவை கைக்கொடுக்க
அன்னதனை வாங்கி யவாவுடனே—துன்னுமுளைச்
சேற்றை யலம்பித் திகழமுக்கை மாற்றியபின்
சாற்றரிய வட்டி றனிற்புகுந்து—சீற்றமிலாள்
வெய்யவழன் மூட்ட விறகில்லை யென்று சொலச்
செய்ய மனையின் சலாகைதனைக்—கொய்தகற்றி
வீட்ட வவற்றை முறித்து விறகாக
மாட்டி முளையை வறுத்தெடுத்துக்—தாட்டிகமாய்
உத்தமமென் றோதரிசி யாக்கி யுலையிலிட்டுத்
தத்தைமொழி யன்னஞ் சமைத்த பின்னர்—பக்தியொடு
நாதா வமுது சமைத்துவிட்டேன் நற்கறிக்கு
ஏது புரிவே னெனவிளம்பத்—தீது செயார்

இளையான்குடி மாறநாயனுர் சரிதை

குழிநிரம்பாக் கீரைவகை கொய்துவந்து நல்க
மழலையுரை யாளதனை வாங்கி—விழைவு பெற
ஆய்ந்தவசித் தூய வகன்பாத் திரத்திலிட்டு
வாய்ந்தபழக் கத்தால் வகைவகையாய்த்—தோய்ந்த பல
நாவுக் கினிய கறிசமைத்து நாயகற்கு
யாவு முடிந்த தெனநவில—மேவியங்கண்
எல்லாமாய் நின்ற விறைவன் றுயி லுணர்த்தப்
பொல்லாவென் றீவினையைப் போக்க வந்து—இல்லதனில்
கண்வளரு நற்றவத்தீர் கண்விழியு மென்றெழுப்பத்
துண்ணெனவே சோதியாய்த் தோன்றுதலும்—பெண்ணணங்கும்
செப்புதொண்ட ஞருந் திகைத்துநின்று ரப்பொழுது
அப்பணிவார் மால்விடைமே லந்தரத்திற்—றுப்பிதழாள்
தன்னேடு தோன்றித் தகவுடையா யென்னடியார்க்
கன்னமிட்ட பேற்று லணங்கிெனுடும்—பின்னமின்றி
விண்ணவர்க்கு மெட்டாச் சிவலோக மேவுமென்று
கண்ணுதலாற் கூறிக் கரந்திடவும்—பெண்மணியுந்
தானுஞ் சிவலோகந் தன்னிலெய்திச் சந்ததமும்
மோனசுகம் பெற்ற முதல்வர்களின்—றேனுகுக்குஞ்
செந்தா மரையை நிகர் சேவடிகளைத் தினமும்
வந்தித்து யாம்வணங்கு வாம்.

ஸ்வித்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த எழுபது வயது சென்ற ஒரு மாது ராட்டினத்தில் ஊக்கத்துடன் நூல் நூற்றுக் கொண்டிருப்பதாக ஓர் ஆங்கில நண்பர் மகாத்மா காந்திக்கு எழுதியிருக்கிருர். அவர் நெசவும் செய்கிருராம்.

வயல் எறும்பு என்ற ஒருவித ராட்சஸ எறும்பு தன்னுடைய பளுவைப்போல் மூவாயிரம் பங்கு கனமுள்ள பொருள்களை இழுத்துக் கொண்டு செல்கிறதாம்.

பாம்புத் தோல்களால் செய்யப்பட்ட கொடைகள் ஸ்திரீகளுடைய உபயோகத்திற்காக செய்யப்பட் டிருக்கின்றனவாம். தவளைத் தோல்களால் புருஷர்களுக்குக் கோட்டுகளும் செய்யப்படுகின்றனவாம். இவைதான் உடை விஷயங்களில் சமீபத்தில் வந்துள்ள நாகரீகமாகும். பாம்புத் தோல் பட்டைப் போல் மிருதுவாயிருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு சட்டை செய்ய கணக்கற்ற தவளைகளைக் கொல்லவேண்டி யிருக்கிறது.

ஆங்கிலம் படித்த மாணவர் நிலைமை.

ஸ்ரீமான் எஸ். இராமலிங்கையர் எழுதுவது.

மேனாட்டு நாகரீகம் மும்முரமாகத் தலையெடுத்தோங்கித் தாண்டவமாடும் தற்காலத்தில் ஆங்கிலம் படித்த மாணவரின் நிலைமை அதோகதியாகி வருகிறதென்றே அறையவேண்டும். அந்தோ! அவர்கள் நூற்றுக் கணக்காகத் திரவியத்தைச் செலவுசெய்து, ஆங்கில பாஷையில் பாண்டித்திய மடைய நிரம்பவும் பாடுபட்டு இராப் பகலாய் பிரதி தினமும் மேஜையண்டை கையும் புத்தகமுமாக அமர்ந்து, பத்து பரீட்சை தேறி வெளி வந்தால், அவர்களது வெளுத்த முகத்தையும், குழிந்த கண்களையும், மழுங்கிய பார்வையையும், மெலிந்த உடம்பையும் பார்க்கப் பார்க்கப் பரிதாபகரமா யிருக்கின்றது. தமது தேகாரோக்கியத்தையும், உலக ஞானத்தையும் ஒரு பொருட்படுத்தாது, ஆங்கிலத் தேவதையை உட்காரும்போதும், பேசும்போதும், உறங்கும்போதும் மனதில் தமக்குத் தெரியாமலே தியானம் செய்து பஜித்து வந்த அந்த பக்தி கோடிகள் எத்துணை வரப்பிரசாதத்தைப் பெற்றனர்? பாவம்! தம்முடைய வாணுள் பரியந்தம் அவருடைய ஆதினத்திலேயே வியர்வை ஆற்று வெள்ளமென ஓடி வழிந்தாலும் பனியன், உள்ளங்கி, சட்டை சகிதமாக முப்பது அல்லது முப்பத்திரண்டு ரூபாய் சம்பள உத்தியோகத்தைப் பெறும் வரம் மட்டுந்தான். மேற்குறித்த வரம் வெகு எளிதின் அனுக்கிரகிக்கப் படுகின்றதோ? அஃதில்லை.

வருடா வருடம் எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்களும், பி. ஏ. பட்டதாரிகளும், எம். ஏ. பட்டதாரிகளும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகி வருகின்றபொழுது, கவர்ன்மெண்டு உத்தியோகம் யாவரும் ஜாதியபிமானம், கட்சியபிமானம் முதலியவைகளைக் கவனியாமல் விரும்புகிறார்களானாலும், அதைப் பெறுவது குதிரைக் கொம்பாக முடிகிறது. ஒரு உத்தியோக சாலையில் ஸ்தானம் ஒன்று காலியாகி இருக்கிறதென்று வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வெளிப்பட்ட அடுத்த நாளிலே, அதே சாலையில் அறுபதெழுபது விண்ணப்பங்கள் வந்து மலைபோற் குவிந்து

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் 210369

கிடக்கின்றன. அதை நிர்வகிக்கிறவன் ஒவ்வொன்றையும் அப்படியே கடைக் கண்ணால் ஒரு முறை பார்த்துவிட்டு, நிரம்பவும் அனுபவசாலியாயும், ஆங்கிலத்தில் மிக்க பயிற்சியுடையவனாயுமுள்ள ஒருவனைத் தேர்ந்தெடுத்த பின்னர், ஒப்பில்லாத விண்ணப்பங்கள் குப்பைத்தொட்டியைக் கப்பிக்கொள்ளுகின்றன. சிற்சில சமயங்களில், தமக்கறிமுக மானவனையோ, சுற்றத்தானையோ, ஆப்த நண்பனது அபிமான புத்திரனையோ அந்த ஸ்தானத்தை வகிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கின்றான். மிக்க பிரபலமான பெரிய மனிதர்கள், கவர்ன்மெண்டு உத்தியோகம் பெற்று செல்வம் செல்வாக்குடன் ஜனானுகூலர்களாய் வசித்து வருகிறவர்கள், ஆகிய இவர்களிடமிருந்து சிற்சில விண்ணப்பதாரிகள் சிபார்சுக் கடிதங்களை வெகு பந்தோபஸ்தாய் லகோடாவிலடைத்து, மடித்து ஒட்டியனுப்புவதும் உண்டு. அந்தோ! இத்தனை கஷ்டத்துடன் அனுப்பியும் காலிஸ்தானம் சித்தியடையாமற் போகிறது. எத்தனையோ படிப்பாளிகள் மிகவும் கேவலமாகக் கருதப்பட்டு வந்த வேலைகளை, வயிறு பிழைக்கவாவது கிடைத்தாற் போதுமென்று ஏற்றுக்கொள்ளச் சம்மதித்து விடுகின்றனர். என்னே இவர்களது ஆங்கிலப் படிப்பு! தமிழ்ப் பாஷையில்மட்டும் சொற்ப ஞானமுள்ளவர்களிற் பெரும்பாலோர், ஒரே துறையிற் சென்று வெகு அனுபவசாலிகளாயும், இம்மைப் பயனடையவல்ல இலௌகிக அறிவு முதிர்ந்தவர்களாயும் விடுகிறார்கள். ஆங்கில பாஷையைக் கற்றுக்கொள்ளாமலே அவர்கள் மெத்த உலோகோபகாரமான விஷயங்களிற் புகுந்து அவைகளை சீர்திருத்த யத்தனிக்கிறார்கள். ஆங்கிலம் படித்த மாணவர்களோ அவ்விதமில்லை. தேசாபிமானம் மதாபிமானம் வருவதற்குக் காரணமாகியிருப்பது பெற்றோரபிமானம். இதுவுமில்லாத போழ்து, மற்ற அபிமானங்கள் எவ்வாறு அணுகப் போகின்றன?

ஆங்கிலம் படித்த மாணவர்களிற் சிலர் தம்முடைய பெற்றோர்களை மிகவும் ஏளனமாகப் பேசி நிரம்பவும் குரூரமாகவும் நடத்தத் தொடங்குகிறார்களென்பது பிரதி தின பிரத்தியக்ஷமான விஷயம். "போ, போ பிளடி, டாம்ட் ராஸ்கல் சுத்த கர்நாடக மனிதனாக இருக்கிறாயே!" என்று வாயில் வந்தபடி வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாக

210369

வாரி வாரி அள்ளி இறைக்கிறார்கள். விவாகம் முடிந்த பிறகோ, அவர்களுடைய குணங்களும் நடவடிக்கைகளும் முன்னிலும் பன் மடங்கு மாறுதலடைகின்றன. தெய்வ லோகத்திலிருந்து அப்படியே பூலோகத்திலே குதித்து விட்டவர்களாக கருதுகிறார்கள். இந்த கருத்துத்தான் அவர்களுக்கு வேலை கிடைக்காமற் செய்கிறது, தம்மைச் சிசுபருவம் முதல் யௌவனப் பருவம் வரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்த பெற்றோர்களிடத்தில் பக்தியில்லாததால், இவர்களை மற்றவர்கள் (தொழிலில் நிபுணத்துவம் பெற்றவர்களும்; சுய கைத் தொழிலாளர்களும், வியாபாரிகளும்) புறக்கணித்துத் திரணமாக மதித்துவிடுகிறார்கள்.

நிற்க, இவர்களுடைய தெய்வ பக்தியும் சீர் குலைந்து கேடடைந்திருக்கிறது. அநேகமாக எல்லாரும் சந்தியா வந்தனஞ் செய்வது ஒன்றல்லது இரண்டு நிமிஷங்களிலே தான். கைவிரல்களி னோட்டமும், மந்திரச் சொற்களின் ஓட்டமும், மதாசார கொள்கைகளை யாக்கி முடிக்கிற சீக்கிரமும் ஜாக்கிரதையும் நோக்கரிய விந்தையாயிருக்கின்றன. சற்று ஆடம்பரங் குன்றியவர்களும், மதாசாரத்தைக் கடைப்பிடித் தொழுக வேண்டுமென்று உழைக்கும் மகான்களும், உருவத்தின் முன்னதாக நின்று மனவெறுப்புடனும், ஆங்கிலக் கல்விச் செருக்குடனும், ஆனால் புன் சிரிப்புடனும் கரங்களை ஏந்தி கன்னங்களில் பளீர் பளீர் என அறைந்து கொண்டு கள்ளக்கும்பிடு போட்டு கடவுளை வழிபடும் வழக்கத்தைக் கைக்கொள்ளுகின்றார்கள். இஃதென்னோ தெய்வ பக்தி!

யௌவன ஆங்கிலப் பெண்மணிகளும், ஆண்பிள்ளைகளும் சேர்ந்து நந்தவனத்திற் போவதும், பேசுவதும், சரசசல்லாப உல்லாசமாகக் காலங்கழிப்பதும், சுற்றத்தினர் அல்லது நண்பர் விருந்துக்குச் சென்று, ஆண்டு ஜோடி ஜோடியாகக் கூடி நடனம் ஆடிப் பாடி கேளிக்கை கொண்டாடிக் களிவெறியாடி வருவதும் ஆங்கில மதக் கொள்கைகளாகப் போயிருக்கின்றன. அன்னவர்களின் சரித்திரங்களையும், கதைகளையும், புதுவது புனைந்த புதினங்களையும் படித்து புத்தறிவு கொண்ட இந்திய மாணவர்கள் மனதில், இயற்கையாகவே, அவைகளிற் கூறியுள்ள சம்பவங்கள்,

விநோதங்கள், ஏகபத்தினி விரதம், முதலியவைகளே பசுமரத்தாணிபோற் பதிந்துபோ யிருக்கிறபடியால், அவர்கள் ஆங்கிலேயர்களுடைய குணாசாரங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரச் சிறிதும் அஞ்சுகிறார்களில்லை. ஆங்கிலப் புத்தகங்களிலுள்ள அணிகள் ஒவ்வொன்றும் ஒப்புயர்வற்றதாகவும் இனிமையானதாகவும் தோன்றுகிறது; ஆனால் தமிழணிகள் யாவும் வேப்பங்காய் போலவும், விளக்கெண்ணெய் போலவும் அருவருப்பாக மாறுகின்றன. தமிழ்ப்புராண இதிகாசங்கள், செய்யுட்கள், இலக்கண இலக்கிய கிரந்தங்கள் முதலானவற்றைப் படிக்கத் துவக்கினாலும், அது பரம கஷ்டமாக முடிகிறது. ஒவ்வொரு அட்சரமும், ஒவ்வொரு ராட்சதனைப்போலவும், பிரம்மாண்டமான பறவை நாகம்போலவும் தென்பட்டு மனதை அளக்கரிய தவிப்புக்கு ஆளாக்குகிறது. எப்படி யிருக்கின்றன இவர்களுடைய மதாபிமானமும் பாஷாபிமானமும்!

சகோதர சகோதரிகளே! நம்முடைய ஆசாரங்களைக் கடைப்பிடிக்க நம்மை நாமே சீர்திருத்திக் கொள்வோமானால், ஏதாவது புதியதோர் தொழில்புரிய விசாலமான அறிவும் ஞானமும் கிடைக்குமென்று கருதி, பசுபதியான பரம்பொருள் நமக்கு இம்மை மறுமைப் பயன்களை நல்குவாரென்ற திடசித்தத்தோடு அவரைப் பணிந்து ஏத்தித் துதிப்போமாக.

ஒரு பவுன் விலையுள்ள இரும்பிலிருந்து மூன்று பவுன் மதிப்புள்ள குதிரை லாடங்கள் அல்லது 40 பவுன் மதிப்புள்ள கத்திகள் அல்லது 80 பவுன் மதிப்புள்ள ஊசிகள் அல்லது 6000 பவுன் மதிப்புள்ள கடிகாரச் சக்கரங்கள் செய்ய முடியுமாம்.

நடுத்தர வயதுள்ள மனிதனின் வயிற்றிலுள்ள காற்றுப் பைகள் அனைத்தையும் விரித்தால் அவை நூறு சதுர கெஜங்களிருக்குமாம்.

நல்ல விநோதமான சாமான்களெல்லாம் சமீபத்தில் லண்டனில் ஏலம் போடப்பட்டதாம், அதில் பஞ்சடைத்த முதலையும், இரண்டு மூட்டை எறும்பு முட்டைகளும், ஒரு மூட்டை திமிங்கல துடுப்பு இறக்கைகளும், தண்ணீர் குழாய் கைப்பிடியும் ஏலத்தில் விற்கப்பட்டன.

ஜனேந்திர லோபி

பிரெஞ்சு பாஷையில் மாலியர் என்பவர் எழுதிய "உலோபி" என்பதைத் தழுவி வரைந்தது.

(B. S. குமாரஸ்வாமிப் பிள்ளை எழுதியது.)

முன்னுரை

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

எனத் திருவள்ளுவ நாயனார் கூறியதிற் கிணங்க எப் பாஷையிலும் எவ்வாசிரியராலும் எடுத்துரைக்கற் பாலதாய சிறந்த கருத்துக்களைத் தழுவி, நமது சிறுவர் சிறுமிகளுக்கு, நன்னெறி பயிற்றுவிக்க வேண்டிய தவசிய மென ஒரு கருத்தே எம் மனத் துதித்தது. அக் கருத்துடன் ஐரோப்பிய நாடகங்களில் பிரஞ்சுப் பாஷையில் மிகவும் சிறந்ததெனக் கொண்டாடப் படும் மாலியரின் நாடகங்கள் தமிழ்ப் பாஷையில் மொழி பெயர்க்கப் படாமையாலும், மாலியர் என்ற ஆசிரியர் ஆங்கில நாடகத்தின் மேதாவியாகிற ஷேக்ஸ்பியர் என்பவரிலும் சில காரியங்களில் சிறந்தவரெனக் கொண்டாடப் படுதலாலும் அவர் இயற்றிய சில நாடகங்களைத் தழுவி நமது தென்னிந்தியா வழக்கங்களுக்கும், நாகரீகத்திற்கும் தக்கவாறு சில மாறுபாடுகளுடன் எழுதி 'நன்னெறி' 'சத்தியம்' 'சமுதாயச் சீர்திருத்தம்' இவைகளை நமது சிறுவர் சிறுமிகளுக்கு அறிவிக்க வேண்டியதும் அவசிய மெனக் கருதினேன். வயதில் முதிர்ந்த ஒருவர் லோபித்தனத்திற்கும் சௌந்தரிய மாதின் மோகத்திற்கும் மத்தியில் அகப்பட்டுப் பரிதபிப்பதையும் உலக வழக்கினையும் சமுதாய நிலையையும் அறியாமல் காதல் நோயினால் வாலிபர் அடையுந் துன்பத்தையும் ஒவ்வொரு வீட்டிலும் வேலைக்காரர்கள் உண்டுபண்ணுகின்ற தந்திரங்களையும் அவைகளால் ஏற்படா நின்ற துன்பங்களையும், இக் கதையி லன்றி வேறெக் கதையிலும் இவ்வளவு சாதுரியமாய்க் கூறப்படவில்லை.

இந் நாடகம் மிக்கவாறும் ஆதிக் கதையைத் தழுவியிருப்பினும் சிற்சில பாகங்களில் நமது பாஷைக்கும் சீர்

திருத்தத்திற்கும் வழக்கங்களுக்கும் பொருந்தும்படி மாற்றங்கள் செய்யவேண்டிய தவசிய மாயிற்று. ஆங்கிலேயத்தில் இதை வாசித்திருப்போர் அவ் வேறுபாடுகளை குற்றங்களாக மதிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. இயன்ற வரையிலும் வழூஉக்கள் இடையே மறைந்து இந் நாடகத்தின் சிறப்பைக் 'கெடுத்து விடாமல் கவனஞ் செலுத்தி யிருந்தாலும், குற்றங்களைக் கண்ணுற்ேறார் அக் குற்றங்களுக் குரிய என்னை மன்னிக்க வேண்டும்.

இனி இப் பழைய கதையை இயற்றிய மாலியர் என்பவரைப் பற்றி சில வார்த்தைகள் கூறவேண்டியது அவசியம். ஜீன்பாபிஸ்டி அல்லது புனைபெயரால் அறியப்பட்ட மாலியர் என்பவர் பாரிஸ் நகரத்தில் கி. பி. 1622-ல் பிறந்தார். ஐரோப்பிய வசன நடை நாடகங்களில் எழுதப்பட்டிருக்கும் சுபபல நாடகங்களில் இவருடையதே மிகவும் சிறந்ததென யாவரும் வியந்து புகழ்ந்து கூறுகின்றனர். பதினுன்கு பிராயத்திலேயே கூத்துக் கிறங்கி வேஷந் தரித்து நடிக்க ஆரம்பித்தார். பாரிஸ் நகரத்தில் அரசர்க்குரிய அரங்கம் என்ற "ராயல் தீயற்றரில்" இவர் அபிநயிப்பதை அப்போது அரசு புரிந்து வந்த பிரஞ்சு அரசர் லூயிஸ் பெருமானும் அவரைச் சார்ந்தோரும் அனேக தடவைகளில் பார்த்துப் பெரும் மகிழ்ச்சி யடைந்து இவருக்கு உயர்ந்த பரிசுகள் தந்து உபகாரச் சம்பளமும் நல்கினர் என்றால் இவர் மகிமை எம்மட்டு என யூகித்தறிந்து கொள்வோம். மாலியரின் நண்பர்களும் அவர்கூட அபிநயித்த கூத்துவர்களும் சிறந்த புத்திமான்கள் என்று சரித்திரங் கூறுகின்றது. நாடகத்தில் மேதாவி யாகிற இவர் தம் பெருமையை அங்கிலேய நிபுண வித்துவான் பிரடிரிக்கு ஹாரிஸன் மிகவும் வியந்து புகழ்ந்து கூறி யிருக்கிறுரென்றால் இவரது பெருமை மிகச் சிறந்ததென்று கூறவும் வேண்டுமோ ? ஆங்கிலப் பயிற்சி யுடையோர் ஒவ்வொருவரும் இதை நன்கறிவார்கள். இவருடைய சிறப்பையும் அதி நுட்பமான விவேகத்தையும் இதை வாசிப்போரும் அறிவார்கள். தம்முடைய சிறந்த நாடகம் ஒன்றை தாமே அபிநயித்து சபையோ ரனைவரும் ஆனந்தத்தில் மூழ்கி யிருக்கும் தருவாயில், 1673 (கி.பி.) பெப்ருவரி மாதம் 17-ஆம் தேதி இரவில் உயிர் துறந்தார். (தொடரும்.)

ஐம்புல வேடர் கும்மி.

ஸ்ரீமான் வேலுப்பிள்ளை (நவாலி வடக்கு.)

(556-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலோர் மடக் கொடி பாகன் முன்னுளினிற்
பார்த்துச் சிரித்த பழம் பதிபோல்
காலோ ரிரண்டினி லெங்கெங்கும் போய் வரக்
கற்ற விரண்டு சரக் கோட்டை. (8)

அன்ன கற்கோட்டையின் வர்ணனை சாற்றிட
அஞ்சொற் கிளத்திடு மஞ்சிடுவாள்
பொன்னகர் வாணர் புதுமையைப் பார்த்தின்னும்
போதா தென்றே கண் பொறித்திலரால் (9)

ஓதிய காயா புரிய ரணன்னத
னுச்சியிலே யொரு கோபுரமாம்
நீதியல் வேடுவ ரோர் நால்வ ரங்குச்
சேர்ந் திருப்பாரடி ஞானப் பெண்ணே. (10)

கங்கை சடைக் கணி சங்கரனார் மணி
கண்டம்போலே கருங் கண்ணனோர் வேடுவன்
தங்கு மிரண்டு பிலத்துவாரம் போலச்
சாற்று மிருபுழை மூக்கனோர் வேடுவன். (11)

ஒட்டி மட்டி திறந்திடி வீதநற்
கொப்பென்று கூறு பேழ் வாயனோர் வேடுவன்
கிட்டிய வுட்புகுமாறு குடைந்திட்ட
கேள்விச் செவிய னோர் வேடுவனும். (12)

கண்ணனும் மூக்கனும் வாயனு மீரோட்டைக்
காதனு மென்பவர் நால் வருடன்
எண்ணுமைந் தாவது வேடனொருவ
னிவன் பெயரே பெருந் தோலனடி (13)

எண்ணிய வைந்து புல வேடர் செய
லிங் குரைக்கப் பெரும் பாரதமே
புண்ணிய மாமுனி வோர்களு மன்னவர்
போர் வலி மீறுதல் சூனியமே. (14)

ஐம்புல வேடர் கும்மி

செப்பிய கண்ண னெனும் வேடனவன்
சேர்ந் தாரைக் கொல்லி யமிசமடி
ஒப்பிலாக கோட்டையின் முன்னிருந் தேயுல
கோ ரேழையுங் கண்டு கொண்டிடுவான் (15)

சந்திர மண்டலஞ் சூரிய மண்டலந்
தாரகை மண்டல மெங் கெங்கு
எந்திர தந்திர மின்றி யிருந்த
விடத் திருந்தே போய் வருவனடி. (16)

மண்ணி னிற்பனுயர் விண்ணினிற்ப னெட்டு
மட்டினிற்பன் திசை யெட்டி நிற்பன்
கண்ணி னிற்பன் பொருள் காட்டி நிற்ப னெங்குங்
கண்டமட்டி னிற்பன் ஞானப் பெண்ணே (17)

வீறு கொண்டவிழி யேறு கொண்டாற் பழி
மேவு மிவன் மலர் தூவி நரை
ஏறு கொண்டானொடு மாறு கொண்டா னுடல்
நீறு கொண்டா னென்பர் ஞானப் பெண்ணே. (18)

விட்டுணு பெண்ணென மண் வௌவினானரி
மெய் யெலா மாயிரங் கண் கௌவினான்
வட்டமதியிவன் திட்டியினா லுடன்
வாடியுங் கூடியும் வருவானே. (19)

கொள்ளிக் கண்ணனிவன் செய்து வரும்மாயக்
கூத்திரனக் கூறுதல் கூடாதே
தள்ளிக் கண்ணன் செயல் மூக்கெனும் வேடுவன்
தன் செயல் கூறுவன் ஞானப் பெண்ணே. (20)

கூறிய மூக்கனொரு வேடனிவன்
கூறிய தாலத்தினம் சமடி
சீரிய காயா புரியை யியக்குதல்
செய்யும் பொறி யிவன் கையிலடி. (21)

பாயு மிடைகலை பிங்கலை யென்றிரு
பாசக் கயிற்றினிற் பம்பரம் போல்
ஆயுமிக் காயாபுரிக் கோட்டதன்னை
அங்கு மிங்கும் நடமாட்டி வைப்பான். (22)

சந்த சுகந்த விதங் களென்றால் வெகு
சந் தோடமாக முகந்திடுவான்
வந்த துற் கந்த மிகுந்த வெறியுள
மாட்டினிற் கிறி மறுத் திடுவான். (23)

சண்பக வாசனை கூந்தலிலே வரச்
சந்தேகங் கொண்டு தருமியினுல்
பெண்மயில் பாகனைக் "கொங்குதேர்" பாடலைப்
பேசச் செய் தோனிவன் பெண் கொடியே. (24)

மச்சகந்தத்தைப் பரிமள கந்தமாய்
மாற்றுவித் தாண்டி முன்னுளோ ரெனு
மிச்சம் பழத்தை முகப்பித்தோர் வேந்தனின்
வியா வுயிரினை வீட்டு வித்தான். (25)

வாசனை வர்க்கம் பழவகை வாங்குநர்
ஈசனுக் காமிவை யென்றிடினும்
யோசனை யின்றியவை யெடுத்தே முகந்
துச்சிட்ட மாக்கி விடுவ னடி. (26)

மெச்சிய வீட்டினில் வாழ்ந்துகொண்டே நிதம்
வீணிற் பலுக்கிடு பல்லியைப் போல்
நச்சு நச்சு நச்சு நச்சென்று தும்முவன்
நாடுஞ் சரனூறுஞ் சொல்வ னடி. (27)

சிந்திடு கோழை நிறைந்த செம்மூக்கனின்
செய்கைகள் சிற்சில செப்பிவிட்டேன்
தந்திடு தந்த வரிசைகள் முட்டிய
சாற்றுவாய் வேடன் கதை கேளாய். (28)

தந்திரக் காயாபுரிக் கோட்டை நிலை
சாயாது போன கந்தா னளிப்பான்
வெந்ததும் வேகா ததுமாக வுள்ளே
வேணதெலாஞ் செம்மி விட்டிடுவான். (29)

அப்பு வமிசத்தில் வந்தவனு மிவன்
ஆரையும் பேசமுன் வந்தவனும்
உப்புப் புழிகைப் புக்கார்ப் பொடுகாழ்ப்பென
வோது மறுசுவை யுண்டியனும். (30)

ஐம்புல வேடர் கும்மி

நசை யுரைக்கினோர் மாமரப் பாவைதன்
நாவை யசைக்கினும் நாவசையான்
வசை யுரைக்கின் மயிர்க் கால்தொறு மொவ்வொரு
வாய் படைத்தே வம்பு சொல்வ னடி. (31)

அன்னைக்குக் கோடிபொய் தந்தைக்கோ ராயிரம்
ஆசானுக் கைந்து நூறுயிரமாம்
பின்னைத் தமர்மனை சுற்ற மிவர்கட்குப்
பேசும் பொய்யெண்ணப் பெருங்கோடி. (32)

வந்த வடியர் மனம்நோக வவன்
வளவள வளவென் று குலைப்ப னடி
சந்து முலைச்சியர் தம்மை மருட்டுழிச்
சர்க்கரை போல்வச னிப்ப னடி. (33)

திங்கள் சடைக்கணி சங்கா னற்புத
திவ்விய நாமங்கள் செப்ப வென்றால்
அங்கு மாணிக்கர் முன்னே புத்தர் தோற்றுழி
ஆனதோர் தன்மை யடைவ னடி. (34)

சுள்ளைக் கருக்கிக் கடித்துக் கொண்டுபனைக்
கள்ளைப் பெருக்கிக் குடித்துக் கொண்டு
மெள்ளக் கதையினைப் பேசவிட்டாற் பின்னை
வேடிக்கை பார்க்கலாம் ஞானப் பெண்ணே. (35)

மின்ன லிடிக்கு மிடிபோலே குழல்
விட்டு வெடிக்கும் வெடிபோலே
பின்னை முடிக்குங் கடல்போலே யவன்
பேச்சினைப் பார்த்திடி லாச்சரியம். (36)

சிராய்க் காமனன் னூல் படிப்பான் வீர
திரச் சுவடி பல முடிப்பான்
பூராயமாகவே தொங்கித் தொங்கியவன்
போடுந் தாளம் பார்க்கில் வேதாளம். (37)

கண்ணன் தனக்கு முதற்பூசை செய்யக்
கண்டு பெரிது கனன் றெழுந்தே
எண் ணி சிசுபலனோடு நின்றே யிவ
னேசிய பேச்சுக்கள் மோச மடி. (38)

கந்த மூலங்களிற் றந்தவ னந்தங்
கறியிருக்க நெய் யுறி யிருக்க
வெந்த குடகுந் தசையு மெலும்பும்
வெடுக்குப் புலாலு மிசைவ னடி. (39)

கொல்லச் சொல்வா னொன்றைக் குத்தச் சொல்வான்
கோளைச் சொல்வா னிது கூடாதென் [வெகு
றல்லச் சொன்னல் நல்ல வாளைச் சொன்னயென்
ரகராதில் புதுநூ லவிழ்ப்பான். (40)

ஊத்தைவாய் வேடுவன் செய்கை சொன்னே னினி
ஒட்டைச் செவியன் செய லுரைப்பேன்
காத்திய லம்பர வம்ச மடியவன்
கண் தெரியாத கசட னடி. (41)

கீத நாதங்களைக் கேட்டிடு வானவன்
கின்னர யாழொலி வேட்டிடுவான்
போதனையுள்ள வசனமொன் றுள்ளே
போகவிடா தோட்டை பொத்திடுவான். (42)

சங்கர சங்கர சங்கர சங்கர
சங்கர சங்கர சங்கரனே
சங்கர சங்கர சங்கர சங்கர
சங்கர சங்கர சங்கரனே. (43)

வம்புகள் தும்புகள் கேட்டிடுவான் பொல்லா
வாதுகள் சூதுகள் கேட்டிடுவான்
நம்பனி னற்புத நாமமென் றூ லுள்ளே
நாரா சஞ்சென் றென நைந்திடுவான். (44)

கூனியவளுரை கோளுரை கைகேகி
கூட நின்றே கேட்டுக் கொண்டு பின்னல்
மானவி ராமன் வனமாளச் செய்த
வன்கண் ணனிந்த மளவ னடி. (45)

தூரல்பு தினங்கள் சூக்கும வார்த்தைகள்
சொன்ன மறைமலி வாசகங்கள்
பாரம்பரியக் கதைகளு மிங்கிவன்
பாற்கேட் டுலகம் படித்த தடி. (46)

ஒட்டைக் காதன் வேடன் தன்மை யுரைத்தனன்
ஓதுவன் றன்மை பெருந்தோலன்
கோட்டைக் காயாபுரி சுற்றுமுற்று மெங்குங்
கூடிநிற் பானவன் ஞானப் பெண்ணே. (47)

முடியுள்ள மேருமலையின் சிகரங்கள்
மூன்றை முறித்தமருத் தாசன்
அடியுற்ற சான்ருண்மை யுள்ளகுலத்தி
லவதரித்தா னடி ஞானப் பெண்ணே. (48)

தோலனடி வெள்ளைத் தோலனடி கருந்
தோலனடி மஞ்சட் தோலனடி
தோலனடி பசுந் தோலனடி செம்மைத்
தோலனடி மயிர்த் தோலனடி. (49)

அன்னத்தின் தூவிமயிர்ச் சேணம் மென்மை
யான மலர்ப்பஞ் சணையணையில்
நன்னித் திரைகொள்ள வேணுமென்பான் சந்து
நானம் புனுகுகள் வேணுமென்பான். (50)

சுத்தசல மிளவெந் நீரிற் றன்னைத்
தோய்த்துக் கொள்வான் நல்ல வன்னவன்ன [னும்
வத்திரத்தாற் றன்னைப் போர்த்துக் கொள்வானின்
மாலைகளும் பூச்சும் சேர்த்துக் கொள்வான். (51)

வெய்யிலைக் காணவும் வெம்புவ னுங்குளிர்
மேவிடக் காணவும் வெம்புவனும்
தொய்யிலைக் காணவும் வெம்புவனும் மதி
தோன்றிடக் காணவும் வெம்புவனும். (52)

கால்பிடிக்கப் பெண்கள் கைபிடிக்கப் பெண்கள்
கட்டிலிற் றுஞ்சவும் பெண் கொடிமார்
மால்பிடிக்க விவனிங்ஙனமே செய்யு
மாய மொருவர் வகுப்பாரோ. (53)

பூவினு மெல்லிய மேனியனு மொரீ
புல்லிற் றிடுக்கிவா னெறும்பு
மேவிக் கடிக்கினு மாவிபதைத் திவன்
மெத்த மெத்த விம்மிச் சோருவனும். (54)

(இன்னும் வரும்.)

கோடை காலமும் கொத்து மல்லியும்

(வைத்தியர் ஸ்ரீமான் வேங்கடாசல முதலியார்
நவசக்தியில் எழுதியது.)

தமிழ் நாட்டி லுள்ளாரிற் பலர் கோடை காலந்தோறும் வெப்பம், சுரம், பித்தம், வாந்தி, தாகம், சொரி, சிரங்கு முதலிய ரோகங்களால் பீடிக்கப்படுதலும், இதற்காக மருத்துவர்க்கும் மருந்துக்கும் பத்தியத்திற்கும் இடையறாது செலவு செய்தும் பலன் பெற்றார் சிலரும், பலன் அற்றார் பலருமாகப் போதலும் அநுபவமே.

சீதோஷ்ண மாறுதலால் நமது நாட்டில் நேரும் கோடை (வசந்த, கிரீஷ்ம ருதுக்கள் என்னும் இளவேனில் முதுவேனிற்) காலங்களில், வெப்பம், தீக்காற்று, ஜலாதாரக் குறைவு, மூளை யுருகும் வெயில், முகங் கருகும் தீட்சண்யம், உதிரங் கொதிக்கும் கனல் ஆவி, உதரம் வலிக்கும் வாயு பந்தனம், மலமுஞ் சலமுஞ் சுண்டும் வரட்சி, தாங்கக் கூடா தாகம், சகிக்க வியலாத் தாபம், நிறுத்த முடியா வியர்வை, பொறுக்க மாட்டா அயர்வு முதலிய உண்டாதலும், இதனிடையே அக்கினி நட்சத்திரம் (கத்திரி வெயில்) காட்டுத் தீப்போல் கலங்க வைத்தலும், இந்நாட்களில் வாத, சிலேத்ம தேகிகளை விடப் பித்த தேகிகள் பெரும்பாலும் உஷ்ண, பித்த ரோகங்களுக்கு உள்ளாதலும் சர்வ சாதாரணம்.

மிகு செயல்

இன்னுரிலும் சில்லோர், பல்லறத்தினுஞ் சிறந்த நல்லறமாகிய இல்லற தருமத்திற்கு மாறாகக் கூடா நற்பாற் குலநலமற்ற விலை மாதர்கட்குப் பொருளையு மழித்துப் பிரதி பயனாகப் பெறுகின்ற பெரும் பொருள்களாகிய வெள்ளை, வெட்டை, சுருக்கு, கொறுக்கு முதலிய மேக ரோகங்களாலும் மெலிந்து வருந்துதலும் பரிதாபமே!

இவ்வாறாகிய ரோகிகளும் ஏனைய சுக தேகிகளும் இக்கோடை காலத்தில் கொத்துமல்லிக் கீரையையும் கொத்து மல்லி விதையையும் பிரதி தினமும் உபயோகித்து வரின் உஷ்ண—பித்த—மேக—ரோகங்களின் வேகத்திற் காளாகாது மீளலாம்.

கோடை காலமும் கொத்து மல்லியும்

வீண் செலவு

நாகரீக பானங்களாகிய சோடா, கலர் வகைகள், ஐஸ் கிரீம் வகைகள், ஷர்பத், நீர் வகைகள், காபீ, தேயிலை, கோக்கோ வகைகள் முதலியவற்றிற்காம் அவ்வளவு செல வும் இதற்கில்லை. தற்கால சுகம் போற் காணும் அவற்றால் சில தேகிகளுக்குப் பின்னால் தோற்றும் வேறு ரோகங்களும் இதனால் தோன்றா.

இது நமக்குத் தெரிந்ததுதானே! நாம் அருந்தி வரு வது தானே! பல மருந்துகளாலும் மருத்துவராலும் உட னுக்குடன் தடுக்க முடியாத வெப்ப பித்த ரோகங்களை இக் கீரையும் விதையுமா தடுக்கும்? என எண்ணாது நம்பிச் செய்து வரின் நலமுறலாம்.

கொத்துமல்லிக் கீரை

பச்சைக் கொத்துமல்லி யென்னும் கீரையைத் தெரி யாதாரும் உபயோகியாதாரு மிலர். இக் கீரையாற் றீரும் நோய்களாவன :

வாத அரோசகம், பித்த கோபத்தா லுண்டாகின்ற பற்பல வியாதிகள், சிரசிலும் மூளையிலும் அதிகரித்து நின்று கெடுக்கும் சூடு, தூக்கமே வாராமல் தடுக்கும் நித்திரா பங்க ரோகம், அஜீரணம், வயிற்றுக் கோளாறு முதலிய தீரும். ஆண்மை (சத்துவம்) உண்டாம்.

இக் கீரையை, தொகையல், தொக்கு, பச்சடிகளாகச் செய்தும், தாளிதங்களுடன் சேர்த்தும், குழம்பு, ரசம், பொரியல்களில் கூட்டியும் வருதல் நமது நாட்டு வழக்கம். வடை பகோடா முதலிய பலகாரங்களில் கலந்து வருதலும் வீட்டுப் பழக்கமே.

தொகையல்

இக் கீரையைத் தொகையலாக அரைக்கையில் அல் லது இடிக்கையில் சேர்க்கும் மிளகாய், உப்பு-புளி-சீரகம், உளுத்தம் பருப்பு, கடுகு, தேங்காய் துருவல், காயம் முத லியவற்றோடு எலுமிச்சம் பழ ரசமும் சேர்த்துக் கொள் ளின் பின்னும் உத்தமமாம்.

சீதள தேகிகளுக்கு இது சற்று குளிர்ச்சியைத் தரு மாதலால் இத்தகைய தேகிகள் மட்டும் வதக்கித் தோல் போக்கிய இஞ்சித் துண்டு சிறிது சேர்த்துக் கொள்ளல் நலம்.

எலுமிச்சம் பழத்தைக் கசக்காமல் அப்படியே இரண்டாக அறுத்து (தோல் உள்ளும் சுளைகள் வெளியும் வரும்படி பின் பக்கமாக மடித்துத் திருப்பிக்கொண்டு) ரசம் பிழிந்து துணியில் வடிகட்டிய பின் அந்த ரசத்தைச் சற்று இளஞ் சூடாக அனலில் காட்டியபின் தொகையலில் சேர்த்தல் கப தேகிகளுக்கும் நலமாகும்.

பித்த நீரைப் போக்கல்

சூரியோதயத்தின் முன் வேலங் குச்சு, ஆலம் வீழ்து இவற்றுள் ஒன்றால் பல் தேய்த்து வாய் அலம்பிய பின் இந்த கொத்துமல்லித் தொகையலில் கொஞ்சம் நாவின்மீது வைத்து இருவிரல்களால் (நாவு வழிப்பதுபோல்) சிறிது நேரம் மெதுவாகத் தேய்த்துக் கொண்டிருக்கப் பித்த, அரோசக, சுர சம்பந்தமான நீர் வெளிப்படும். இவ்விதம் பிரதி தினமும் தொடர்ந்தாற்போல் நாவழித்துப் பின் வாய் கொப்பளித்து வரின் பித்தாதிக்க ரோகங்கள், அரோசக வியாதிகள், சுரப் பகுதிகள் முதலியன விருத்தியாகா.

நாவழித்தல்

பிரதி தினமும் பித்தநீரை வெளிப்படுத்தி வருவதன் பயனாக, கண் வியாதிகளும் மூளைக் கொதிப்பும் நீங்கி, கண் பிரகாசமும் கிரமமான காலத்தில் நல்ல நித்திரையும், வைகறைத் துயிலெழும் நற்பழக்கமும், சோம்ப லற்றுச் சுறுசுறுப்பும், ஞாபக சக்தியும், மனோ வன்மையும் ஆண்மைத் தன்மையும், மண வாழ்க்கையில் இன்பமும் உண்டாகும்.

குணம்

இவ்வாறு குச்சியால் பல் தேய்த்துத் தொகையலால் நாவழித்து வாய் அலம்பிய பின் இதே தொகையலை கழற்சிக் காயளவு உட்கொண்டு அதன் பின், நிசித் தண்ணீர், நீராகாரம், சாத தீர்த்தம் எனப் புகலும் பழைய சாதத்துள்ள

தெளிவு நீரை அரைக்கால் படியோ, வீசம் படியோ அருந்தி வரலாம். இவ்விதமே பிரதி தினமும் தொகையலும் நீரும் தொடர்ந்து உட்கொண்டு வருதலால்:—அஜீரண ரோகங்கள், பித்த ரோகங்கள், சுர ரோகங்கள், சுரம் விட்டபின் காணும் அரோசக ரோகங்கள், மண வாழ்க்கையில் மனமின்மை, புளித்தேப்பம், மந்த வாயு, வயிற்றிலும் மார்பிலுங் காணும் எரிச்சல், வயிற்று இரைச்சல், பசியில்லாமை, பசி தெரியாமை, அகால பசி, அதிக பசி, சப்தத்துட னுண்டாகும் பெரு ஏப்பம், தலை சுற்றல், மயக்கம், தியக்கம், கிறுகிறுப்பு, வாந்தி, வாய் நீர் ஊறல், குமட்டல், வெள்ளோக்காளம், சூலைவலி, சூலை எரிச்சல், அடி வயிற்று வலி முதலியவை சாந்தமாம்.

"கொத்துமல்லிக் கீரை உண்ணில் கோர அரோசகம் போம்
பித்தம் எல்லாம் வேருடனே பேருங்காண்—சத்துவமாம்
வெச்செனவே போகம் விளையுஞ் சுரந்தீரும்
கச்சுமுலை மாதே நீகாண்"

இவ் வெண்பாவி லுள்ள, (கோர அரோசகம் போம், பித்தம் எல்லாம் வேருடனே பேரும், சத்துவமாம், போகம் விளையும்) என்பவை கவனிக்கத் தக்கனவாம்.

பாகம்

இக் கீரையை, துவரம் பருப்பு, பச்சை மிளகாய் முதலிய சம்பார வர்க்கங்களுடன் சேர்த்தும் சாம்பார் போலச் சமைத்துங் கொள்ளலாம். எவ்வித காய்களின் பொரி குழம்பு முதலியவற்றுடனும் அதிகமாகக் கூட்டிக்கொண்டு வரலாம்.

எலுமிச்சம் பழ ரசம், தயிர், காயம், பச்சை மிளகாய், இஞ்சி, உப்பு முதலியவற்றுடன் கொத்துமல்லித் தழையைப் பொடியாக அரிந்து சேர்த்து, தாளிதம் செய்து, (தயிர் பச்சடிபோல) உபயோகித்து வரலாம்.

பித்த கியாழம்

பச்சைக் கொத்துமல்லித் தழை, சுக்கு, மிளகு, சீரகம், கருவேப்பிலைத் தனித்தனியாக சற்று வறுத்து, தண்ணீர் விட்டுக் கியாழம் செய்துகொண்டு, காலை மாலை தோறும் சாப்பிட்டு வர, பித்தக்கோபம், பித்த வறட்சி, பித்தாதிக்கம்,

தலை சுற்றல், கண் மஞ்சணித்தல், கண், நகம், மூத்திரம் இவை மஞ்சள் நிறமா யிருத்தல், தீராத வாந்தி, வெள்ளோக்காளம், வயிற்றுவலி, செரியாமை முதலிய தீரும்.

வெந்நீர் ஊறல் கியாழம்

கொத்துமல்லித் தழையைச் சற்று வதக்கிக்கொண்டும் மிளகை ஒன்றிரண்டாக உடைத்தும், வெந்நீரில் ஒரு மணி நேரம் ஊறவைத்து வடித்து உட்கொண்டு வந்தால் நீர், மலம், அன்னுசயம் இவற்றின் விகற்பங்கள் நீங்கிச் சுகந் தரும்.

தோக்கு

பச்சைக் கொத்துமல்லித் தழை, எலுமிச்சம் இலைக் கொழுந்து, நாரத்தன் இலைக் கொழுந்து, புளியன் இலைக் கொழுந்து, விளா இலைக் கொழுந்து, கொளிஞ்சி இலைக் கொழுந்து, பச்சை மிளகாய், இஞ்சி தோல் போக்கியது, இவற்றைப் பொடியாக அரிந்து பின் மா உலக்கையால் இடித்து உப்பு கூட்டிப் பொரித்த காயம் சேர்த்து வழக்கப் படி தாளிதம் செய்து ஒன்று படக் கலந்து, நன்ருக யிடித்து, வேண்டு மளவு எலுமிச்சம்பழ ரசம் தாராளமாகச் சேர்த்து வைத்துக் கொண்டு பிரதி தினமும் காலை மாலை நேரங்களில் கழற்சிக் காயளவு உட்கொண்டு வரலாம். பகல், இரவு, போஜனத்துடன் உபகறியாகவும் உபயோகித்துக் கொள்ளலாம்.

இத் தொக்கினுல் பித்த, வாத ரோகங்கள் பல வெகு விரைவில் குணமாம்.

குறிப்பு

கொத்துமல்லித் தொகையலையும், தொக்கையும் சுடுகையான சாதத்துடன் சேர்த்து எள்ளெண்ணெய் அல்லது நெய் விட்டுப் பிசைந்து சாப்பிடலாம். ரசம், மோர் சாதங்களுக்கு உப கறியாகவும் கொள்ளலாம். பழையது சாப்பிடும் நற்பழக்க முடையோர்க்கு இத் தொகையலும் தொக்கும் தக்க பதார்த்தமாம். கொத்துமல்லித் தழை பித்த ரோக சஞ்சீவியாம். வைத்திய நூற்களின் போராதாவும் இதுவே!

ஒற்றுமையின் உயர் நிலை.

ஸ்ரீமான் எஸ். தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் எழிதியது.

ஒற்றுமையாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரிய வேண்டாம்—இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்க வேண்டாம். (1)

கூடி விருந்துண்ண வேண்டவில்லை—பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை
நாடி யெவரொடும் நட்பினராய்த்—தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்ட முண்டோ? (2)

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு—ஜாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டி விட்டு
பாரதத் தாய்பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ? (3)

வேதன் முகத்திலுதித்த வரே—இங்கு
மேலா யெழுந்த குலத்தினராம்!
பாதமதில் வந்த பாவியரே—என்றும்
பாரில் இழிந்த அடிமைகளாம்! (4)

வாயில் விஷமுண்டு பாம்பினுக்குக்—கொட்டும்
வாலில் விஷமுண்டு தேளினுக்குத்
தாயிற் சிறந்த பிரமனுக்கும்—இரு
தாளில் விஷமுண்டோ சாற்றுவீரே. (5)

உச்சி மரத்திற் சுவைக்கனியும்—தூரில்
ஓடிப் பரந்தெழும் வேரதனில்
நச்சுக் கனியும் பழுத்த பலாமரம்
நானிலத் தெங்குமே கண்டதுண்டோ? (6)

ஜாதி யிரண்டலால் வேறுளதோ—ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ?
ஆதியிறைவன் வகுத்த துவோ—மக்கள்
ஆக்கிய கற்பனை தானிதுவோ? (7)

நாயனுர் வந்த திருக்குலத்தை—உயர்
நந்தனுர் வந்த பெருங்குலத்தைத்
தீய குலமெனத் தள்ளுவரேல்—அது
தெய்வம் பொறுக்கும் செயலாமோ ? (8)

வேதியராலே மழைவருமேல்--வயல்
வேலை செய்யாது விளைந்திடுமோ ?
வாதமெலாம் கட்டிவைத் திடுவோம்—ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத்திடுவோம். (9)

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்—கூரை
வெந்து விழுவதும் கண்டிலீரோ ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ ? (10)

மானமே வாழ்வின் உயிர் நிலையாம்—அதை
மாசுறச் செய்தல் கொடுங் கொலையாம்
ஈனஜாதி யெனும் பேச்சினைப்போல்—நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ ? (11)

மன்னுயிர்க்காக முயல்பவரே—இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே—என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா ! (12)

மத்திய அமெரிக்காவில் பால் கொடுக்கும் மரமொன்று கண்டு பிடிக்கப்பட் டிருக்கிறது. அதன் மேல்பட்டையை செதுக்கிவிட்டால் பால் வடிகிறதாம். பால் ருசியாகவும் புஷ்டியுள்ளதாகவும் இருக்கிறதாம்.

காலி போர்னியாவில் புது மாதிரியான ஹோட்டல்! ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இதில் உணவு பரிமாறுவதற்கென்று ஆட்கள் இல்லை. வட்டமான சுழலும் பலகை ஒன்றுண்டு. இது போஜன அறையையும் சமைய லறையையும் சுற்றிச் சுற்றி வரும். போஜன அறையில் இப்பலகை ஓரமாக அமைக்கப்பட்டுள்ள ஆசனங்களில் உணவு கொள்வோர் அமர்ந்திருப்பர். பலகை சுழன்று கொண்டே இருக்க போஜன பதார்த்தங்கள் ஒன்றன்பின் ஒன்ருக வந்து கொண்டிருக்கும். அவரவர்கள் வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு உண வருந்தல் வேண்டும்.

பழமொழித் திருத்தம்

களவுங் கற்று மற.

(546-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஆசிரியர். கு. மாணிக்க நாயகர், புதுவை.)

மேற்கூறிய நூலாசிரியர்கள் கருத்துக் கொப்பக் "களவுங் கற்றுமற" என்ற பழமொழியை வைத்து நோக்குங்கால் முற்றும் விரோதமாக விருப்பது தெளிவுறும். மேலோர் மொழிந்துள்ள பழமொழிகளியாவும் நூற்கருத்துக்கொத்திருக்கக் "களவுங் கற்றுமற" என்பது மாத்திரம் என் முரண்படா நிற்கின்றது. முரணிய செய்கை யென்றுந் தவறுதலுக்கிடமானதே யென்பது மறுக்க முடியாத தொன்றே. எனவே "களவுங் கற்று மற" என்பது மேலோர் கருத்துக்கொத்து நிலவமுடியாமற் போவதால் சரியான பழமொழி யென்று யாவரும் கொள்ளற் கிடமின்று. மேலும் இப்பழமொழியின் போதனைப்படிக் களவு செய்யக் கற்றுப் பின் மறந்து விடுவதால் உலகிலுள்ள எல்லா செயல்களையுந் தெரிந்தவர்களாக உலகம் ஒப்புக் கொள்ளுமா? அல்லது திருட்டுத் தொழிலிற் பழகுவோர் மற்றத் தொழில்களிலுஞ் சிறந்திருப்பரென்றேனும் போற்ற முடியுமா? களவினால் மற்றத் தொழில்களும் பொருந்து மென்பதுளதானால், அறிஞர்கள் அக்களவுத் தொழிலையே புரிந்து மேலேறமாட்டார்களா? களவுத் தொழிற் சிறந்த தெனின் யாண்டு மதற்கெனப் பலகழகங்கள் நிறுவி, அவைகளின் மூலமாய்த் திருட்டுத் தொழிலினைக் கற்பிக்க எவரேனும் முன் வரமாட்டார்களா? களவு மேலானதாகின் சிறுவர்கள் திருடும்போது, தாய்தந்தையர், ஆசிரியர், மற்றும் பலரும் என் அவர்களைக் கண்டிக்க முற்படுகின்றனர்?

இப் பழமொழியானது சதாக்களவு செய்யுப்படிச் சொல்லவில்லை யென்பர் சிலர். ஒரு தடவையேனுந் திருடினால் திருட்டன்றோ! திருட்டுக்கு எப்போதுந் தண்டனையிருக்க ஒரு தடவைக்கு மாத்திரம் மன்னிப்புண்டோ? ஒருவன் ஒரு பொருளைத் திருடி விட்டு, நான் "திருடக் கற்றுக்கொள்கிறேன்" பின்னர் மறந்து விடுவேன்

என்பாளுனல் அவன் வார்த்தைகளை யார் செவி மடுக்க முடியும்? இவை போன்ற இன்னும் பல முறைகளையுங் கொண்டு நோக்குழிக் "களவுங் கற்று மற" என்பது பல மற்றதாகிறது.

இஃதிங்ஙனமாக, "களவுங் கற்றும் அற" என்பார் கூற்று ஓர் நூதனம். இதில் "கற்று" என்பதைப் பெயராகக் கொள்ள முடியாமற் போவதற்கும், அதற் கோருரை அகராதியிற்றேகுப் பார்ப்பினுங் கிடைக்காமற் போவதற்கும், அற என்ற ஞன்னிலே யேவல்வினை "அறு" என்று இருக்கவேண்டுமன்றி 'அற" என்றிருப்பது தவருக நிலவுமாகலின் அதையுந் தள்ளுவதற்கும் யாதோரையமு மின்று

இதற்கு மேலும் பொருத்தமற்ற "களவு மகற்று மற" என்பதில் ஒரே வாக்கியத்தில் "அகற்று" என்ற ஒரு ஏவல் வினையும், "மற" என்ற மற்றோர் ஏவல் வினையும் வருதலின் இரண்டு ஏவல் வினை முற்றுக்கள் ஒரு வாக்கியத்தில் வருவது இலக்கணத்திற்கு முழு பகையாகலானும் இதுவு மகற்ற வேண்டுவதே. நாம் இதுகாறுங் கூறிய வாற்றல் "களவுங் கற்று மற" களவுங் கற்றும் அற "களவு மகற்று மற" என்பவை முற்றும் பிழைக்கருத்துள்ளன வென்பதை யொருவாறு உணரலாம். ஆனல் வாசகர்கட்கு இம்மூன்று மூதுரைகளுந் தவருயின் தவருகாத பழமொழி யொன் றிருக்க வேண்டுமே, அஃதேனின்னும் பொறிக்கவில்லை யென்ற ஆவல் தோற்றலாம், ஆகவே அதையுமிவண் குறித்து விடுவோம் "களவுங் கற்க மற" என்பதே முற் கூறிய மூன்றுக்கும் ஆதாரமான மூதுரை, இப் பெற்றிய நல்லுரையை உலகினர் காலாந்தரத்தில் மறந்து, தவருக வழங்கத் தலைப்பட்டனர்.

"களவுங் கற்க மற" என்பதற்குப் பொருள் கொள்ள வேண்டுமானல் பொய், கொலை, கள், சூது முதலியவைகளைக் கற்க மறப்பதோடு "களவுங் கற்க மற" என்ற இழிவு சிறப்பும்மையைக் கொண்டு நோக்கும்போது தெளிவா னிடைத்தோன்றும் வெண்மதி போன்று பொருள் கோடலா மென்றேற்படுகின்றது.

களவுங் கற்று மற

களவினு லொரு வகையிற் பொருள் வருவா யுண்டாகு மென்றுன்னிச் சிலர், களவுத் தொழிலைக் கற்க விழையலா மாகலின், "களவுங் கற்கமற" என்பதிற் "களவும் என்றதி லுள்ள உம்மையை யுயர்வு சிறப்பும்மையாகக் கொண்டு பொருள் கோடலு மொன்று. உலகினர் பொருளிலார்க் கிவ்வுலக மில்லை" யென்னு மாபோற்றத் தம் வாழ்க்கைக் கத்தியாவசியமான பொருள் தேட வேண்டுவது கடமை யாக இருத்தலின் எவ்வழியாக விருப்பினுமென் ? பொருள் வந்தாற் போதுமென்று கருதிப் பல தீ நெறிக் கண் செல் போன்று திருட்டுத் தொழிலாலும் பொருள் சேர்க்க முற் படா நிற்கவே "களவுங் கற்க மற" என்ற உறுதிமொழி யைக் கூறி வைத்தனர். இதை மெய்ப்படுத்த "தீவினை விட்டீட்டல் பொருள்" என்ற ஔவைப் பிராட்டியாரின் திருவாக்கொன்றே போதும், ஆனுல் களவையுங் கற்க என் மறக்கவேண்டு மென்பதை விளக்கக் களவின் கொடுமைகளைப் பற்றி யிவண் வரையலாமாயினும் "களவுங் கற்று மற" என் பதைப்பற்றி வரையும்போதே களவின் தன்மையையும் பற்றி யொருவாறு சுருக்கிக் கூறியுளோமாகலின் இங்கு அதை விரிக்காமல் நிறுத்தினும்.

இப் பழமொழியைப்பற்றி யின்னுந் தெளிவாக நமது நண்பர்கட்குப் புலப்பட்டால் அவர்கள் அபிப்பிராயமும் வேண்டற் பாலதே.

லிவர்பூல் நகரின் மாதா கோயிலுள்ள வாத்தியப் பெட்டி உலகத்திலேயே மிக்கப் பெரியதாம். அதனை வாசிப்பவர் உத விக்கு பதினேழு டெலிபோன்களை உபயோகிக்க வேண்டுவது அவசியமாம். அன்றியும் அப் பெட்டியில் 10934 குழாய்களிருப்ப தாயும், மிகத் தாழ்ந்த சப்தமிடும் குழாயின் குறுக்களவு மட்டும் ஒரு கஜமும் அதன் கனம் ஒரு டன்னுக்கு அதிகமு மிருக்கின்ற தாம்.

எறும்பு ஒன்று தன் கனத்தைவிட மூவாயிரம் மடங்கு கன முள்ள பொருளையும் வாயில் கவ்விக்கொண்டு போகக்கூடிய சக்தி யுடையதாம்.

விகடத் துணுக்குகள்

வக்கீல் :—"நீ விடுதலை அடையவேண்டுமானால் உன் மனைவி ஜட்ஜி பார்க்கும்படி விம்மி விம்மி அழுது கொண்டு நிற்கவேண்டும்."

கைதி :—"இவ்வளவுதானா? என்னை விடப்போகிறார்கள் என்று அவளிடம் சொன்னால் போதும்."

சங்கரியும், லக்ஷ்மியும் குடிக்கூலிக்கு ஒரு வீடு பார்க்கப்போனார்கள். வீடு முழுதும் சுற்றிப் பார்த்த பிறகு சங்கரி லக்ஷ்மியைப் பார்த்து வீடு உனக்குப் பிடித்ததா என்று கேட்டாள்.

லக்ஷ்மி :—வீடு நல்ல வீடுதான். ரூம் அதிகமில்லை. படுக்கை அறை ஒன்றுதான் இருக்கிறது.

சங்கரி :—ஏதடி! கேலி செய்கிறாயா? எனக்கு இரண்டு புருஷன் இருப்பதாக யோசனையா?

முதல் மாணவன் :—"இன்று காலை 4-அணா கடன் கேட்டதற்கு இல்லை என்றாயே. இப்போது பிஸ்கோத்துப் பெட்டி யுடைத்து பிஸ்கோத்துத் தின்றுகொண்டிருக்கிறாயே!"

இரண்டாம் மாணவன் :—அது என் குற்றமல்ல. பிஸ்கோத்துக் கடைக்காரன் மட்டும்தான் இப்போது எனக்குக் கடன் தரக்கூடியவன்.

வக்கீல் கோவிந்த முதலியார் ஒரு சமையற்காரனுக்கு விளம்பரம் செய்திருந்தார். விளம்பரம் பார்த்து ஒரு பிராமணப் பையன் வந்தான். "நீ இதற்கு முன்னால் யாருக்கு சமயற்காரனா யிருந்தாய்?"

பையன் :—"ஜவுளிக்கடை ராமுலு செட்டியாருக்கு."

முதலியார் :—"அவரை விட்டு நீங்கக் காரணம் என்ன?"

பையன் :—"அங்கே புருஷனுக்கும் பெண்டாட்டிக்கும் ஓயாச் சண்டை."

முதலியார் :—"எதற்காக?"

பையன் :—"அவர் வீட்டு சமையலைப்பற்றி."

சித்திரப்பத்தி

திவான்பஹதூர்

S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் B.A.B.L. M. L. C.

கோயமுத்தூர் மஹாநாட்டுத் தலைவர்.

ஜஸ்டிஸ் கட்சியினர் காங்கிரசில் சேர, தூண்டுதலாய் நின்று,

தனது விடா முயற்சியின் பலனாக கோவை மஹாநாடு

கூடவும், தீர்மானங்கள் இனிது நிறைவேறவும்

காரண கர்த்தாவாயிருந்த

டாக்டர் பி. வரதராஜலு நாயுடுகாரு

(தமிழ்நாடு பத்திராதிபர்.)

ஸ்ரீ டி. பகவந்தம் குப்தா அவர்கள், B.A., B.L.,
ஆரிய வைசிய மஹாநாட்டுத் தலைவர்.

ஸ்ரீமதி K. சந்தரம்மகாரு

ஆரிய வைசிய மாதர் மஹாநாட்டுத் தலைவர்.

ஸ்ரீமான் D. B. சென்ன கிருஷ்ண செட்டியார் அவர்கள்

ஆரிய வைசிய கான்பரன்ஸ் வரவேற்புக் கமிட்டித் தலைவர்.



சமீபத்தில் பெங்களூரில் நடந்தேறிய, கதர் காட்சியில் மஹாத்மா வீற்றிருக்கும் வைபவம்.

இதில் கண்ட ஆப்டோன் பிளாக்குகளை, நமக்கு அன்புடன் கொடுத்துதவிய, தமிழ்நாடு ஆசிரிய ரவர்களுக்கு நமது மனமார்ந்த வந்தனங்கள் உரியதாகும்.

பத்திராசிரியர்.

உலகப் போக்கு.

பிரான்சு தேசத்தில் பாரிஸ் நகரைச் சேர்ந்த இரண்டு கொத்தர்கள் ஓர் அதிசயமான வீடு கட்டியிருக்கிறார்கள். இந்த வீட்டை அதன் சொந்தக்காரன் வேண்டும்போது காகாவென்று சுற்றச் செய்யலாம். அல்லது அதிவேகமாகச் செல்லக்கூடிய மோட்டாரைப்போல செலுத்திக் போகலாம். பகல் பன்னிரண்டு மணிநேரமும் இந்த வீட்டின் சொந்தக்காரன் வெயில்காய விரும்பினானென வைத்துக் கொள்வோம். அவன் வீட்டின் கீழ் முகப்பில் காலையில் உட்கார்ந்தானாயின் பின்னர் தான் இருந்த விடத்தைவிட்டு எழுந்திராமலே, வெயில் மட்டும் தன்மீது படும்படி வீட்டைச் சுற்றிக்கொண்டே யிருக்கலாம். குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டுவதற்காக மணிக்கு 100 மைல் வேகத்தில் வீடு சுழலும்படி செய்யலாம். ஆனால் சாமான்களும், மனிதர்களும் அப்போது வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்த மோட்டார் வீட்டைக்கட்ட 10,000 பவுன் ஆயிற்றாம்.

***

இரங்கூனைச் சேர்ந்த பாக்கூரில் ஒரு பசு ஆறுகால்களையுடைய அதிசயமான கன்று ஈந்திருப்பதாக ஓர் அன்பர் தெரிவிக்கிறார்.

***

இங்கிலாந்தில் போல்க்ஸ்டோன் என்ற இடத்தில் ஒரு பெண் குழந்தை இரண்டங்குல நீளமுள்ள வாலுடன் பிறந்ததாம். ஆனால் வைத்தியர்கள் அதனை நீக்கி விட்டார்களாம்.

***

பிரிட்டனிலுள்ள மாரிஸ் மோட்டார் தொழிற்சாலையில் தினந்தோறும் 250 மோட்டார் வண்டிகள் செய்யப்படுகின்றனவாம். மணிக்கு 32 மோட்டார் வீதம் அதாவது ஏறக்குறைய இரண்டு நிமிஷத்தில் ஒன்று வீதம் செய்யப்படுகிறதாம். மாரிஸ் மோட்டார் ஒன்று 5000 தனித்தனிப் பகுதிகளாலாவது. இப்பகுதிகள் வெவ்வேறு தொழிற்சாலைகளிற் செய்யப்பட்டு மத்திய தொழிற்சாலைக்கு வருகின்றன.

இங்கே அந்தந்தப் பகுதிகளைச் சேர்ப்பதற்குத் தனித் தனித் தொழிலாளர் இருக்கின்றனர். மோட்டார் கூடுகள் ஒன்றன்பின் ஒன்ருய் வந்துகொண்டே யிருக்கும். வரிசை யாக நிற்கும் தொழிலாளர் அந்தந்தப் பகுதியைச் சேர்த்து வருவர். இவ்வாறு பூரணமாக்கப்பட்ட வண்டி இரண்டு நிமிஷத்துக்கு ஒன்று வீதம் தொழிற்சாலையைவிட்டு வெளியே செல்லும்.

***

நைல் பள்ளத்தாக்குகளில் 40 அடி நீளமுள்ள நாகங் கள் காணப்படுகின்றனவாம்.

***

பெண்கள் பொதுவாக 18 வயதில் தான் தங்கள் முழுத்தேகக் கட்டை அடைகின்றனராம்.

***

இங்கிலாந்திலுள்ள ஆண்களின் ஜனத்தொகையில் 100-க்கு 26 பேர்கள் பிரம்மச்சாரிகள் 34 பேர்கள் விவாக மானவர்களாம்.

***

ஒரு வயது குழந்தைகளில் பெண்களைவிட ஆண் குழந்தைகள் 100-க்கு 10 அதிகமாக இறந்து போகின்றன வாம்.

***

ஸ்காட்லாந்தில் மனிதர்கள் சராசரி 5 அடி 8½ அங்குல உயரமும் ஐரிஷ்காரர்கள் 5 அடி 8 அங்குலமும் ஆங்கிலேயர் கள் 5 அடி 7¼ அங்குலமும் வேல்ஸ்காரர்கள் 5 அடி 6½ அங்குல உயரமும் இருக்கிருர்களாம்.

***

லண்டனிலுள்ள வாடகை மோட்டார் பஸ் கம்பெனி ஒன்று தினம் 28 அந்தர் நிறையுள்ள டிக்கட்டுகள் விற்பனை செய்கிறதாம். அந்தப்படி பார்க்கும்பொழுது வருஷத்தில் 500 டன் நிறையுள்ள டிக்கட்டுகள் செலவழிக்கின்றனவாம்.

***

பெண்கள் தற்காலம் இங்கிலாந்தில் அணிந்து வரும் உடைகள் இன்னும் 30 வருஷங்களுக்குள் மாறிவிடும். பிறகு அவர்கள் கால் சட்டைகளை அணிந்துகொண்டு திரிவார்கள் என்று ஸ்ரீமான் பால்பாய் வெட் கூறுகிருர்.

உலகப் போக்கு

வெள்ளை எறும்புகள் ஒரு மாதத்தில் தினம் ஒன். 80 ஆயிரம் முட்டைகள் வீதம் இடுகின்றனவாம்.

***

ஒருநாள் ஒரு அங்கத்தினர் மிகவும் விரைவாக ஒரு மோட்டாரில் சவாரி செய்தார். மற்ற அங்கத்தினர்கள் அவர் மீது குற்றம் சாட்டி அபாரதம் விதிக்கவேண்டு மென்று சொன்னபொழுது அவர் தான் 'பிரேக்' போட்டு நிறுத்துவதில் மிகவும் சோம்பலாக இருந்துவிட்டதாகப் ப்தில் கூறினாராம்.

***

மனிதர்கள் நடக்கவும் எழுதவும் கூட சத்தியற்றவர்க ளாகிவிடும் காலம் கூடிய சீக்கிரத்தில் வந்துவிடும். அப் பொழுது நடப்பதற்கு மோட்டார் வண்டியையும் எழுது வதற்கு 'டைப் ரைட்டரையும்' உபயோகிக்கவேண்டிய தாகும் என்று ஸ்ரீமான் டீன் இஞ்சு கூறுகிறார்.

***

ஸ்பெயின் தேசத்தில் சமீபத்தில் எடுத்த ஜனக் கணிதி யின் பிரகாரம் நூறு வயது தாண்டிய 96 ஆடவர்களும் 258 ஸ்திரீகளும் இருக்கிறார்களாம்.

***

இதாலியில் இஸார்க்கோ என்னும் நதி ஒன்று இருக் கிறது. அதை அதன் படுக்கையிலிருந்து முறித்து ஒரு பெரிய குழாய் வழியாக எட்டு மைல் தூரம் கொண்டு போய் பால்ஸானோ நகருக் கருகில் 700 அடி உயரத்தி லிருந்து கீழே விழும்படி செய்யப் போகிறார்கள். இந்தச் செயற்கை நீர் வீழ்ச்சியிலிருந்து 2,20,000 குதிரைகளின் சக்தியுள்ள மின்சார சக்தி உண்டாகுமாம்.

***

இங்கிலாந்தில் அல்வாஸ்டன் என்னுமிடத்தில் வசிக் கும் மிஸ்டர் ரோலண்டு பிரின்ஸ் என்பவர் 1927-ம் வருஷத் துக் காலண்டர் ஒன்று செய்கிறார். இது உலகிலேயே மிகச் சிறிய காலண்டராம். கால் ரூபா நாணயத்தினால் இதை மூடி மறைத்துவிடலாம். ஆயினும் இதிலுள்ள தேதி விவரம் மிகத் தெளிவாயிருப்பதால் பூதக் கண்ணாடி யின் துணையின்றியே இதைப் பார்த்துத் தேதி தெரிந்து கொள்ளக் கூடுமாம்.

புட்டிகளுக்குத் தக்கை போட உபயோகிக்கும் கார்க் என்னும் பொருள் உஷ்ணத்தைத் தடுக்கும் சக்தியுள்ளதாம். வீட்டுச் சுவர்களின் நடுவில் கார்க்கை வைத்துக் கட்டிவிட்டால், மழை காலத்தில் உள்ளிருக்கும் சூட்டை வெளியில் விடாமலும், கோடை காலத்தில் வெளியிலுள்ள அதிக உஷ்ணத்தை உள்ளே விடாமலும் பாதுகாக்குமாம். இங்கிலாந்தில் கெண்ட் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளருக்கு இத்தகைய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

***

லண்டனிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலில் உருளைக் கிழங்கு உரிப்பதே தொழிலாகக் கொண்ட ஒரு பட்டாளம் சிறுவர்கள் இருக்கிறார்களாம். இவர்கள் இவ்வேலையில் மிகச் சமர்த்தர்களாம். சிலர் மணிக்கு 70 ராத்தல் உருளைக் கிழங்கு உரித்துவிடுவார்களாம். வருஷத்திற்கொருமுறை இவர்களுக்குள் போட்டி வைக்கப்பட்டு வெற்றி பெறுபவர்க்கு வெகுமதி யளிக்கப்படுகிறது. இப்போட்டியொன்றில் ஒரு சிறுவன் 28 ராத்தல் உருளைக் கிழங்கை 18 நிமிஷம் 25 விநாடியில் உரித்தானும்.

***

50 வருஷம் உயிர் வாழ்ந்த ஒருவன் சாதாரணமாக 6000 மணி நேரம் தூக்கத்திலும் 6500 மணி நேரம் வேலையிலும் கழித்திருப்பான் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் குழந்தை பிறந்த தினத்திலிருந்து தூங்கத் தொடங்கிவிட்டபடியாலும் கொஞ்சம் வயதான பின்னரே வேலை செய்யத் தொடங்கியிருக்க முடியுமாதலாலும் சாதாரணமாக தினந்தோறும் தூக்கத்தில் கழிக்கும் நேரத்தைவிட ஒரு மணி அதிகவேலை செய்திருக்கவேண்டுமாம்.

***

பிரான்ஸ் தேசத்திலுள்ள மார்ஸேல் நகரத்து வக்கீல் ஒருவர் தமது மரண சாஸனத்தில் வைத்திய கிசிச்சை சாலைக்கு 1,500 பவுன் எழுதிவைத்திருக்கிறார். இத்துடன் அவர் சேர்த்திருக்கும் குறிப்பில் "வீணுக்கு வழக்காடிய பைத்தியக்காரர்களிடமிருந்து நான் என் பணமெல்லாம் சேகரித்தேன். எனவே, நன்றி செலுத்தும்பொருட்டு இச்சிறு தொகையைப் பைத்தியக்காரர்களுக்கு எழுதிவைத்துள்ளேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"லக்ஷ்மி" பஞ்சாங்கம்

பிரபவஹு ஆடிமீ ஆவணிமீ சாலிவாகன 1850, கலியுகாதி 5029, பசலி 1336, கோல்லம் 1102, ஹிஜரா 1345, இங்கிலீஷ் 1927ஹு ஆகஸ்டுமீ

ஆகஸ்டு	ஆடி ஆவணி	வாரம்	திதி	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
1	17	திங்	சது 53-58	பூர 17-48	சி 60	சதுர்த்தி விரதம்
2	18	செ	பஞ் 59-20	உத் 24-13	அ 24 ம	கருடபஞ்சமி நாகபஞ்சமி
3	19	புத	சஷ் 60-	அஸ் 31-20	ம 31 சி	சஷ்டி விரதம்
4	20	வி	சஷ் 5-15	சித் 38-53	சி 38 அ	கரிநாள் சுபம் விலக்க
5	21	வெ	சப் 11-10	சுவா 46	சி 60	விதை விதைக்க
6	22	சனி	அஷ் 15.18	விசா 52-23	சி 60	மாடு வாங்க
7	23	ஞா	நவ 20-58	அனு 57-30	மா 60	சுப காரியம் விலக்க
8	24	திங்	தச 23-40	கேட் 60	சித் 60	5-நாள் மழை மப்பு காற்று
9	25	செ	ஏகா 24-43	கேட் 0-48	மா 1 அ	ஏகாதசி விரதம்
10	26	புத	துவ 23-40	மூல 2-20	ம 2 அ	பிரதோஷம்
11	27	வி	திர 20-43	பூரா 1-55 உத் 59-48	சித் 60	சுபம் உழவு செய்ய
12	28	வெ	சது 16-5	திரு 56-8	மா 56 அ	வரலக்ஷ்மி விரதம் பௌர்ணமி ஆவணி யாவிட்டம்
13	29	சனி	○ 10-18	அவி 51-20	சி 51 அ	காயத்திரி ஜபம் செய்ய
14	30	ஞா	பிர 3-13 துதி 55	சத 45-50	சி 60	மழை மப்பு மந்தாரம
15	31	திங்	திரி 47-55	பூரட் 40-5	மா 40 சி	ஏற்றம் போட
16	32	செ	சது 40-10	உத் 34-20	அ 34 சி	சவுத்தி விரதம்
17	1	புத	பஞ் 32-55	ரேவ 29-3	மா 60	மரணயோகம் கரிநாள்
18	2	வி	சஷ் 26-28	அசு 24-35	அ 24 சி	சஷ்டி விரதம் மழை
19	ஆவணிமீ 3	வெ	சப் 20-58	பர 20-55	சித் 60	கார்த்திகை விரதம்
20	4	சனி	அஷ் 16.28	*கா 18-20	அ 60	கார்த்திகை விரதம்
21	5	ஞா	நவ 1 -13	ரோ 16-58	சித் 60	ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி
22	6	திங்	தச 11-3	மிரு 16-8	அ 16 சி	விதை விதைக்க
23	7	செ	ஏகா 9-58	திரு 17-30	மா 17 சி	ஏகாதசி விரதம்
24	8	புத	துவ 9-55	புன 19-18	சி 60	பிரதோஷம் விவாகம்
25	9	வி	திர 10-55	பூச 22-5	அ 22 சி	கரிநாள்
26	10	வெ	சது ● 12	ஆயி 25-45	மா 60	அமாவாசை விரதம்
27	11	சனி	அமா 15.55	மக 30-25	அ 30 சி	கிணறு வெட்ட
28	12	ஞா	பிர 19-28	பூர 35-58	சி 35 அ	மாடு வாங்க
29	13	திங்	துதி 24-13	உத் 42-20	சி 60	சுபமுகூர்த்தங்கள் செய்ய
30	14	செ	திரி 29-43	அஸ் 46.55	சி 60	விதை விதைக்க
31	15	புத	சது 38-45	சித் 57-3	சி 60	விநாயக சதுர்த்தி விரதம் மாச சதுர்த்தி விரதம்

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம். காசிப் பட்டுப் புடவை போலிருக்கும். ரூ. 80/—100/—விலையுள்ள புடவைகளி லிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18முX2½ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12/—

K. S. Muthiah & Co.

Post Box 99 :: :: MADRAS

காமபந்து

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்விய ஔஷதம்!

2-மணி நேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீர்யம் எவ்வளவு நீராறிப் போயிருந்தாலும் அதை கெட்டிப் படுத்தி 2-மணி நேரத்திற்கும் அதிகமான சம்சார சுகத்தைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்யநஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறாமல் கட்டுப்படுத்தும். இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் தரப்பியாசத்தினாலுண்டாகும் நபும்ஸகத்வம போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒரு முறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும். கடிதங்களை ரகஸியமாய் வைக்கப்படும். 20 மாத்திரை கொண்ட சீசா 1-க்கு ரூ. 1.

வி. பி. தபால் சார்ஜ் வேறு.

ஸோல் மான்யூ பாக்ட்சரர். —

பூஷண வைத்தியசாலை,

நெ. 212, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதறாஸ்.

மருந்துவாழ் மலையின் மகாத்மியம்.

"அமிர்த சஞ்சீவி"

இது இந்தியாவின் தெற்கே அற்றமான கன்னியாகுமரிக்குச் சமீபித்திருக்கும் மருந்துவாழ் மலையிலிருந்து அனேக மூலிகைகளும் பச்சிலை வகைகளும் உயர்ந்ததும் விலை கூடின சாதனங்களைக் கொண்டு மலையாள வைத்திய நிபுணரால் முறை தவருதபடி தயார் செய்யப்பெற்றது. இதை உபயோகித்த ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே எவவளவு பலஹீனனு யிருந்தாலும் நூதன யௌவனத்தையும் உற்சாகத்தையும் அடையும்படி செய்யும். சகல வியாதிகளையும் தீர்த்து ரத்தவிருத்தி, ஜீரணசக்தி, தாதுபுஷ்டி முதலியவைகளை உண்டுபண்ணும். பாலகன் முதல் விருத்தாள்வரை ஆண் பெண் இருபாலார்களும் உபயோகிக்கலாம்.

20 நாள் மருந்து ரூ. **3**. 40 நாள் மருந்து ரூ. **5.**

தபாற் செலவு வேறு.

M. R. Vaidiasala M. RAMASWAMI Co-,
Kottar, S. Travancore.

மஹா மதனமணி மாத்திரை

தீர்க்ககாலங்களால் துஷ்டரோகங்கள் பிடிபட்டு இரத்தெந்திரியங்கள் கெட்டு பஞ்சேந்திரியங்கள் வாடி திரேசம் மெலிந்து தசவாயுக்கள் பிரகிருதி விரூபிகளாய் அக்னியும் நஷ்டமாகி, யாதொன்றும் ஜலபானம் கூட இறங்காமல் சாவே மேலென்று தவித்திருக்கின்ற ஜனங்களுக்கும் அக்னியை நன்ருய் வர்த்திப்பித்து பசிதீபனதசைத் தந்து, இரத்த இந்திரியங்களை நன்ருய் வரச்செய்து, புனர்ஜீவிகளாய் ஸகல போகானுபவங்களையும் அனுபவித்து பூர்ணாயுசை நிலைநிறுத்துகிறதற்கு மஹா மதனமணி மாத்திரை தேவாம்ருதத்திற்கு ஒப்பானது.

50-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 5—0—0
32-மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 3—0—0

பெரிய காட்லாக்கு இனம்.

ஆயுர்வேத டாக்டர்,

P. K. M. PADMANABHA DASER,

நெ. 39, ஆதியப்ப நாய்க்கன் தெருவு,

ஜியார்ஜ் டவுன், சென்னைப்பட்டணம்.

குழந்தைகளை : :

: : நேசியுங்கள்!

அழுகிறகுழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப் படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்ற வடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை.

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 „ „ விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் :: :: காசி

சரோஜனி

இது ஓர் அழகிய துப்பறியும் நாவல். இனிமையான தமிழ் நடை. இதன் ஆசிரியர் நாவல் எழுதுவதில் பெயர் பெற்று வரும் ஸ்ரீமான் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள். 5, 6 அழகிய சித்திரப்படங்களுடன் கூடியது. படிக்க மனோ உற்சாகமாக இருக்கும். சுமார் 390 பக்கங்களுடையது.

இதன் விலை ரூ. 2 0 0.

ஜீவவசிய பரம ரஹஸ்யம்

மானிடவசிய ரஹஸ்யத்துடனும் பல அற்புதானந்த ரகஸ்யத்துடனும் கூடியது

இது விழிப்பு நிலையில் மானிடரை வசியப்படுத்தும் வசிய நூல். எல்லாம் வசியம்! எல்லாம் மோஹனம்!! எல்லாம் விழிப்பு நிலையில்!!! 30 அரிய வசிய இரஹசியப் பாடங்களும் 22 அருமையான யோகிகளின் மாய மந்திர யோக வைத்திய முறைகளும், வேறு பல மர்ம ரஹஸ்யங்களும் மல்கிக் கிடக்கும்.

இதன் விலை ரூ. 3 0 0.

லக்ஷ்மி புஸ்தக சாலை.

தபால் பெட்டி 99 :: :: சென்னை.

விநோதினி

சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை. சமத்துவம் சகோரத்வம் துவஜ மாகக்கொண்டது.

பெண்கள், வாலிபர், குழந்தைகள், கைத்தொழில், செல்வ நிலை முன்னேற்றத்திற்கும், சாரணர் இயக்கத்திற்கும் திடங் கொண்டது.

வருட சந்தா ரூபாய் 2—0—0 தனிப்பிரதி விலை அணா 3.

விநோதினி ஆபீஸ்

வேப்பேரி, சென்னை.

இனும்! இனும்!!

மூனையில் இரிடியம் உள்ள 14 Kt.
தங்க நிப்பு போட்ட Self-filling
பௌண்டன்பேனு இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும்.

கெடியாரம் விலை ரூ. **4-12-0.**

5 வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும் சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே இக்கயிற்றின் (Wire) உதவியால் இதை எரியவும் நிறுத்தவும் செய்பலாம். புயற்காற்று அடித்தாலும் அணையாது. விசேஷ காலங்களில் இதை வைத்தால் அதிசயத்தைப் பார்ப்பதற்கு ஜனங்கள் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

பாட்டரியுடன் லைட் விலை ரூ. **4-8-0.**
தபால் செலவு **0-8-0.**

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15, A பீட், ஜி. டி. மதராஸ்.

நல்ல சமயம்! வாங்கத் தவறாதீர்கள்!!

பாரீஸ் லேடிகளின் அழகிய போட்டோ படங்கள்.

இதில் பாரீஸ் லேடிகளின் அழகும் விநோதமும் காணலாம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத கண் காக்ஷியாகும். படுக்கை யறையில் ஜோடிக்க வெகு சுந்தரமாயிருக்கும். உண்மையான பாரீஸ் படங்கள் நம்மிடந்தான் உண்டு.

பல ரகமுள்ள 1 டஜன் செட்டுக்கு ரூ. **3-0-0.**

பாரீஸ் எம்போரியம்,
ஜி. டி. மதராஸ்.

பச்சை மோதிரத்தின் மர்மம்

இதில் கதா நாயகனுன சுந்தரமூர்த்தியை இயற்கையாகவே பண ஆசையில் மேம்பட்ட மார்வாடிகளில் பெயர் பெற்ற மார்வாரிமணிசங்கர் அவன் உயிருக்கே ஆபத்து வரும்படியாக, ஒரு நோட்டில் கையெழுத்திட்டு வாங்கி ரூ. 30000 கொடுக்கிருன். மூன்று வருடங் கழித்து வட்டி ரூ. 20000-ம் சேர்த்து ரூ. 50000-க்கு மார்வாடி சுந்தரமூர்த்தியை தொந்திரவு செய்கிருன். பாலாமணி என்ற 20 வயதுள்ள ஒரு பெரிய பணக்கார விதவை சுந்தரமூர்த்தியைக் காதலிக்க அவன் இணங்காமையால், பாலாமணி தன் கையில் சில பிடிகளை வைத்துக்கொண்டு சுந்தரமூர்த்தியை மணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் மார்வாடியிடம் ரூ. 100000 (ஒரு லக்ஷம்) கொடுத்து சுந்தரமூர்த்தி கையெழுத்திட்ட நோட்டைப் பெறுகிருள். எவ்வளவோ தன்னுடைய ஆசை வார்த்தைகளாலும் நடிகைகளாலும் சுந்தரமூர்த்தியை வற்புறுத்தியும், அவன் இணங்காமையால் அவனை கெடுக்க பல சூழ்ச்சிகள் செய்வது படிக்க மிக ஆனந்தமா யிருக்கும். ஒரு சங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்ட பசசை மோதிரத்தின் மர்மத்தால் இரு பெண்கள் கொலை செய்யப்படுவதும், பாலாமணியின் சூழ்ச்சியால் சுந்தரமூர்த்தியின் காதலி கனகசுந்தரிக்கு தன் காதலனைக் கொலை செய்ய வேண்டுமென்ற உத்தரவு கிடைப்பதும், அச்சமயத்தில் அவள் படும் அவஸ்தையும் சுந்தரமூர்த்தியின் கையில் எதுவாக அகப்பட்ட சில பத்திரங்களால் பாலாமணிக்கு கொலை உத்தரவு அரசாங்கத்தாரால் ஆனதும், பலகஷ்டங்களில் அவஸ்தைப்பட்டு தேறி கடைசியாக காதலர்கள், கனகசுந்தரி, சுந்தரமூர்த்தி ஆகிய இருவர்களுக்கும் நடக்கும் கலியாணமும் படிக்கப்படிக்க மிக இனிமையா யிருக்கும்.

இதன் விலை ரூபாய் 1—0—0

லக்ஷ்மி புஸ்தகசாலை,

தபால் பெட்டி 99 :: :: சென்னை.

PERFUME SPRAY.



பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த வித பாட்டில்களிலும் வைத்து உபயோகிக்கலாம்.

விலை ரூ. **2—8—0**.

K. S. முத்தையா
கம்பெனி,
ஹைரோடு, திருநெல்வேலி.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4 ௸ டஜன் 1-க்கு ரூ. 2-4 ௸ சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3 ௸ டஜன் 1-க்கு ரூ. 2 ௸ சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதராஸ்

310369
சென்னை-600 008

அமெரிக்கன்

ஸில்க் அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு, தினசரி, துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முள நீளம் 40" அகலம்.

விலை ரூ. ***6—8—0*** தான்

கிடைக்கவில்லையே! என்று வருந்தவேண்டாம்.

ஏற்கனவே [illegible]5 நாட்களில் 2000 பட்டுக்களுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

சிறந்த வாசனை ஊதுவத்திகள்!

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள்! சேர் ஒன்றுக்கு 24 ரூ எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி	சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி	,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி	,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி	,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

புடவையிலும் : : : : ஓர் புதுமை !

MUTHIAH'S

" NEW MODEL SILK SARI "

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது 1½-இஞ்சி ஜரிகைவேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும், பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளூ, முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பார்வைக்குப் பள பளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக்கூடியதாயு மிருக்கும்.

Extra No 1	16மு × 44" புடவை	1-க்கு 80/—
No 1	ஷை	1-க்கு 60/—
No 2	ஷை	1-க்கு 45/—

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

Printed by P. R. Rama Iyar & Co., Madras and Published by K. S. Sundarar.